289

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை





| மலர் 27 | நள ௵ ஆனி ௴ 1௳ [14—6—76] | இதழ் 6 |
|---|---|---|


நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

# திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார்

அருளிய

# திருவுந்தியார்—உரைவிளக்கம்


சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி

**திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,**

தேவகோட்டை


(மலர் 27 இதழ்–5 பக்கம் 244–ன் தொடர்ச்சி)

வீட்டில் இருக்கிலென் நாட்டிலே போகிலென்
கூட்டில்வாள் சாத்திநின் றுந்தீபற
கூடப் படாததென் றுந்தீபற.

எல்லாவற்றையும் விட்டுத் துறவற நெறியிலே நின்றாலும், அதுவொழிந்து நாடத்தக்கதாகிய மூர்த்தி, தலம் தீர்த்தங்களை அடைந்தாலும் பயனில்லை. பதி உயிருக்குயிராய் இருப்பதை ஞான குரவனின் நல்லருளால் உணர்ந்து, அப்பதியின் உடலாகிய ஆன்மாவில் மெய்ஞ் ஞானம் பொருந்தும்படி நிற்க வேண்டும் இவ்வாறு இல்லையாயின் முத்தி, கூடப்படாத தாகும்.

மக்கள் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய அறநெறிகள் இல்லறம், துறவறம் என்னும் இரண்டு வகையின. பிரம சரியம், கிருஹத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் நால்வகை ஆச்சிரமங்களுள் பிரமசரியத்தைச் சந்நியாசமாகிய துறவறத்துள்ளும் வானப் பிரதத்தைக் கிருஹத்தமாகிய இல்லறத்துள்ளும் அடக்கிக் கூறுவதுண்டு இல்லறம் துறவற மாகிய இருவகை அறங்களும் சிவப்பேற்றிற்கு உதவியாக இருப்பனவேயாகும். இருவகை அறங்களுள் எந்த அறத்தைத் கடைப்பிடித்து வாழ்ந்தாலும், ''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்பதை உறுதியாகக் கொண்டு, மெய்ஞ்ஞானம் கைவர நிற்பதே சிவப்பேறு பெறும் வாய்ப்பை வழங்கும்

மனைவி, மக்கள், செல்வம் ஆகியவற்றில் வைக்கும் புறப் பற்றும், தன்னுடன் பிரிப்பின்றி இருக்கும் உடம்பில் வைக்கும் அகப்பற்றும், பிறவிக்குக் காரணமானவை என்பதை உணர்ந்து, நாட்டையும் வீட்டையும் துறந்து காடுகளிலும் மலைக்குகை முதலியவற்றிலும் வாழ்ந்து ஒரு சிலர் கடுமை யாகத் துறவறத்தைக் கடைப்பிடிப்பர். அறங்களிற் சிறந்தது இல்லறமே எனக் கொண்டு வீட்டிலே வாழ்ந்து, மூர்த்தி தலம் தீர்த்தம் முதலியவற்றில் ஈடுபாடு கொண்டு மற்றும் சிலர் இருப்பார்கள். இங்ஙனமுள்ள இருவருக்கும் இவைகளை விட இன்றியமையாததாய் இருக்க வேண்டுவது, மெய்யன் பினால் உண்டாகும் சிவஞானமேயாகும் ''ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம், நல்ல ஆகமம் சொல்ல அல்லவாம் என்னும், ஈனத்தார் என்கடவர்' என்பது சிவ ஞான சித்தியார்,

தங்கத்தின் மாற்று, கட்டியாய் இருக்கும் போதும் ஆபரணமான போதும். மண் முதலியவற்றுடன் கலந்த போதும் ஒரே நிலையாயிருப்பது போலச் சாதகன், இல்லறம் துறவறமாகிய எவ்வறத்தில் ஒழுகினுலும் ''எல்லாம் சிவன் செயல்'' என்பதை எள்ளளவு கூட மறந்திருக்க மாட்டான். சிவபெருமானது சுதந்தரமும் அவனது சுதந்தரமின்மையும் அவனது உள்ளத்தை விட்டு ஒருபோதும் நீங்குவதில்லை. சிவபெருமானது அட்ட மூர்த்த வடிவங்களுள் நம் உயிரும் ஒன்று. நம் உயிர் சிவபெருமானுக்கு உடலாகும் போது, அவர் நம் உயிருக்கு உயிராகின்ருர். இதனை ஆளுடைய பிள்ளையார் ''உரைசேரும் எண்பத்து நான்கு நூருயிரமாம் யோனிபேதம் நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்ருன்'' என்று அருளிச் செய்கின்ருர்.

நமது உடம்பை இயக்குவது உயிர் என்பது, நாமறிந்தது. அதுபோல நம் உயிரும், அதனை உடலாக உடைய சிவத்தால் இயக்கம் பெறுகின்றது என்னும் உண்மையை உணர்ந்துநமக்குள்ள சுதந்தர ஈனத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ''ஆயக்கடவேன் நானேதான் என்னதோ இங்கு அதிகாரம்'' எனவும், ''நானே இதற்கு நாயகமே'' எனவே வரும் திருவாசகங்கள் இங்கே நினைவு கூர்தற்குரியன. செய்யும் செயல்கள் அனைத்தும் சிவச்செயல்களே'' எனக் கொள்ளுதல்வேண்டும். ''யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்றும் இக்கோணை ஞான எரியால் வெதுப்பித், தான் செவ்வே நின்றிட'' வேண்டுமென்று சிவஞான சித்தியார் அருளிச் செய்கின்றது,

ஒரு தொழிலை ஒருவன் ஏவப், பிறிதொருவன் செய்வானயின், ஏவியவனை ஏவுதற் கருத்தா என்றும், செய்தவனைஇயற்றுதற் கருத்தா என்றும் சொல்லுவர். அச்செயல் இயற்றுதற் கருத்தாவாற் செய்யப்பட்டதாயினும், ஏவுதற் கருத்தாவாற் செய்யப்பட்டதாகவே எல்லோரும் சொல்லுவர், அது போலவே சுதந்தர ஈனர்களாகிய உயிர்கள் செய்யும் செயலனைத்தும், சுதந்தரராகிய சிவபெருமானது நியமனப்படியே

நிகழுகின்றதென்பதை உறுதியாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

எல்லாச் செயல்களுக்கும் ஒரே கருத்தாவாயிருக்கின்ற சிவபெருமானை நினையாமல் தக்கன் செய்தது வேள்வியேயாயினும் அதனால் விளைந்தது, அவனுக்கும் அவனுக்குத் துணை நின்றவர்களுக்கும் துன்பமே என்பதையும், சிவபெருமானையே நினைந்து நின்ற சண்டேசுரர் "பாதகமென்றும் பழி என்றும் பாராதே, தாதையை வேதியனைத் தாளிரண்டும் சேதித்தது, அவருக்கு இதத்தையே தந்தது என்பதையும் நாமறிவோம். அதனால் உண்மையை அறிந்து, எல்லாம் சிவன் செயல் என்பதை உணர்ந்து மெய்ஞ்ஞானமாகிய வாளை உயிரிற் சாத்தி ஒழுகுதல் வேண்டும், அவ்வாறு ஒழுகாதவர்களுக்கு வினை நீக்கம் உண்டாகிச் சிவப்பேறு சித்திக்க மாட்டாது.

(தொடரும்)


## "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 6-00 வெளிநாடு ரூ. 10-00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்"

தருமபுரம், மாயூரம் P. O.

# "சைவ சமயத்தின் மாண்பு" (1)

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்,

இளவரசு, மதுரை ஆதீனம்.

நமது சைவசமயம், இப்பூவுலகிலே இன்றைய மக்கள் பின்பற்றி வருகின்ற சமயங்கள் பலவற்றிலும் மிகவும் தொன்மையானது. அதுபரந்த நோக்குடையது மட்டுமல்ல தனித்த ஒரு மனிதரால் தோற்றுவிக்கப் பெறுதது. ஒரு காலத்திலே, உலகெங்கும் பரவியிருந்தது. இதுவாகும், அதுவாகாது என்னும் பிணக்கில்லாதது எல்லாச் சமயத்தாரின் கோட்பாடுகளேயும் தன்னகத்தே கொண்டு திகழ்வது.

பிற சமயத்தவரும் இன்றைய விஞ்ஞானிகளும் கண்டிடாத சில அரிய பெரிய உண்மைகளேயும், தத்துவங்களேயும் கொண்டு இலங்குவதோடு, எம் மதத்தவரும் நாளடைவில், அதில் அடங்கியுள்ள பேருண்மைகளேக் காணுமாறு செய்து ஒப்புக்கொண்டிடச் செய்யும் தன்மை வாய்ந்தது அதுமட்டுமா? சிவபெருமாஞல் அருளிச் செய்யப்பெற்ற வேத ஆகமங்களேயும், அனுபூதிமான்களான அருளாளர்களால் அருளிச் செய்யப்பெற்ற பன்னிரண்டு திருமுறைகளேயும், பதினன்கு சாத்திரங்களேயும் ஆதாரமாகக் கொண்டு, "சிருஷ்டியாதி" ஆண்டுதொட்டு கடந்த 195கோடியே 58இலட்சத்து 85ஆயிரத்து 76 ஆண்டுகளாக அழிந்திடாது நிலேபெற்றுத்திகழ்வது

அதனுலேயே, தமிழ்நாட்டில் தோன்றிய தத்துவஞானிகளில் தலேசிறந்த ஒருவரும், "சிவஞான சித்தியார்" என்னும் செந்தமிழ்த் தத்துவப்பெருநூலே இயற்றி அருளியவரும் ஆகிய அருள்நந்தி சிவாச்சாரிய சுவாமிகள் (கி. பி. 13-ஆம் நூற்றுண்டு)சிறந்த சமயம் யாது? என்பது குறித்து, பின்வருமாறு அருளியிருக்கின்றுர்.

"ஓது சமயங்கள் பொருள் உணரும் நூல்கள்
ஒன்றேடு ஒன்று ஒவ்வாமல் உள பலவும்
இவற்றுள் யாது சமயம்? பொருள் நூல் யாது?
இங்கு என்னில், இது ஆகும் அது அல்லது எனும்
பிணக்கதின்றி. நீதியினல். இவையெல்லாம்
ஓரிடத்தே காண – நின்றது யாதொரு சமயம்?
அதுசமயம் பொருள்நூல் ஆதலினல் இவை எல்லாம்
அருமறை ஆகமத்தே அடங்கியிடும். அவையிரண்டும்
அரனடிக் கீழ் அடங்கும்".

இப்பாடலின் மூலம் அவர் சைவ சித்தாந்தத்தின் சிறப்பினை போற்றிக்கூறியிருக்கிருர் என்பதை நாம் அறிகின்றேம்.

அடுத்து, பௌத்தமும், சமணமும், சீக்கியமும் இந்து மதத்தின் கிளைகளே என்பதை யாவரும் அறிவர். அவைகளுக்குப் பின் தோன்றியதுதான் கிறித்துவமதம். இம்மதம் என்ன சொல்லுகிறது தெரியுமா? ஏசுநாதரைத் தவிர, வேறு யாராலும் மோட்சத்தைக் கொடுக்க இயலாது. கிறித்துவர்களைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் அஞ்ஞானிகள் என்று பறைசாற்றி வருகின்றது.

அடுத்து, இசுலாமிய மதத்தவர்கள் என்ன சொல்லுகிருர்கள் என்று பார்ப்போம். யார் யார் "கலிமா" சொல்லுகின்ருர்களோ, அவர்களைத் தவிர மற்ற அனைவரும் "காபீர்" என்றும் அவர்கள் செய்த புண்ணிய பாவங்களெல்லாம் பரலோகத்தில் அவர்களைச் சாராதென்றும், "அல்லாஹுத்தாலா" என்ற பெயர் தவிர, கடவுளுக்கு வேறுபெயர் கிடையாதென்றும், "திருக்குரான்" ஒன்றே கடவுளால் அருளிச் செய்யப்பட்ட நூல் என்றும் கூறி வருகின்ருர்கள்.

ஆனல், நமது சைவ சமயமோ, யார் எந்தச் சமயத்தைச் சார்ந்திருந்தாலும், எந்தத் தெய்வத்தை அல்லது எந்தக் குருநாதரைக் கொண்டாடினலும் உருவமற்ற அருவநிலை, உருவநிலை, அருவுருவநிலை ஆகிய மூன்றில் எதை, என்னவிதமாக வழிபட்டாலும் அம்மூன்றில், எதை எவ்விதம் பாவித்தாலும், எல்லோருக்கும் பலன் உண்டு என்று கூறுகின்றது.

அவ்வாறு, அப்பலனைக் கொடுக்கின்ற தெய்வம், மற்ற தெய்வங்களைப்போல். பிறப்பு இறப்பு இல்லாததும், வேதனைப் படாததும், மேல்வினை செய்யாததுமான பரம்பொருள் ஒன்றே என்றும், அதுவே, அவரவர்க்குரிய பலனைக் கொடுத்தருளும் என்றும் கூறுகின்றது.

இவைகளைப் பற்றி, தமிழகத் தத்துவஞானி அருள்நந்திச் சிவாச்சாரிய சுவாமிகள்

''மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையிற்கொண்டு. அங்கு இச்சித்த தெய்வம்போற்றி
சினமுதல் அகற்றி வாழும். செயல் அறமானால் யார்க்கும்
முனமொரு தெய்வம், அச்செயற்கு முன்னிலையாம் அன்றே''

— சித்தியார் 114

என்றும்,

''யாதொரு தெய்வம் கொண்டீர். அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர், மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படும். இறக்கும், பிறக்கும் மேல்வினையும் செய்யும்
ஆதலால் இவையில்லாதான், அறிந்து அருள் செய்வன் அன்றே''

— சித்தியார் 115

என்றும் மிகத் தெளிவாக அருளியிருக்கிறார்

இதிலிருந்து, பிற மதத்தவர்களுடைய வழிபாட்டு முறைகள் கூட, நமக்கு உடன்பாடு உடையன என்பது நன்கு தெரிகின்றது. எனவே நான், இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் பிற நாடுகளிலும் வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற பேரறிஞர்கள், சிந்தனையாளர்கள் நமது இந்திய நாட்டுத் தத்துவக் கொள்கைகளை, குறிப்பாக சைவசமயகொள்கைகளை ஆராய்ச்சி செய்து அவற்றில் உள்ள பேருண்மைகளை உணர்ந்து போற்றிப் புகழ்ந்தனர்.

மேல் நாட்டவர்கள், நமது சைவ சமய உண்மைகளைப் போற்றிப்புகழக்காரணம் என்ன என்ற ஒருகேள்வி எழுகிறதல்லவா? அவர்களது நாடுகளில், சமூக முன்னேற்றமும், நவ நாகரீகமும், விஞ்ஞான வளர்ச்சியும், நல்ல பொருள் செழிப்பும் இருந்துங்கூட, அவர்களது சமய போதனைகள், அவர்களுக்கு மனநிம்மதியை அளிக்கவில்லை. எனவேதான், உலக

முழுவதும், அமைதி நிலவ வேண்டுமானல், அதற்கு சைவ சமயமே வழிகாட்ட வேண்டும் என்று கூறினர்.

அவ்வாறு நமது சைவ சமய உண்மைகளை ஆராய்ந்து போற்றிக் கூறியவர்களில், ஆல்டஸ் அக்ஸ்லி, சர். வில்லியம் ஜோன்ஸ், மாக்ஸ்முல்லர், பெரிடல்கீத், விண்டர்நிட்ஸ், கிரிபித், எட்வின் அர்னல்ட், வில்லியம் காரி, ஷோபனேர், ரோமைன் ரோலண்ட், டாக்டர் ஜி. யூ. போப், விக்டர்கசின் ஆகியோர் முக்கியமானவர் ஆவர்.

டாக்டர் ஜி. யூ. போப் கூறியிருப்பதைக் காண்போம். அவர், திருவாசகத்தை ஆங்கில மொழியில் பெயர்த்துக் கூறிய போது, சைவ சித்தாந்தத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறியிருக்கிறர்.

"If any progress is to be made in the development of real Science of Hinduism, as it now is, our English people must have the means of obtaining some in sight into the living system which exercises at the present day such a marvellous power over the minds of the great majority of the best Tamil people. For, under some form or other caivism is the real religion of the South India and North Ceylon, and the Caiva Siddhantha philosophy has, and deserves to have far more influence than any other.

The Caiva Siddhantha system is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all the – religions of India, It is peculiarly the South Indian, and Tamil religion, and must be studied by everyone who hopes to understand and influence the great South Indian people.

Caivism is the old pre-historic religion of South India essentially existing from Pre Aryan times and holds sway over the hearts of the Tamil People But this great attempt to solve the problems of God

**the soul, humanity, nature, evil, suffering and the unseen world has never been fully expounded in English**. Its text books (probably its sources) exist in Tamil only and in high Tamil verse, which is often made of set purpose, obscure and difficult. (Classical Tamil is very little studied) yet this key alone can unlock the hearts of probably Ten millions of the most intelligent and progressive of the Hindu races.

**இதன் கருத்து:**

ஆங்கிலேயர்கள், இந்து மதத்தின் உண்மையான விஞ்ஞானத்தை முன்னேற்றிட வேண்டுமானால், இன்றையதினம் தமிழ் பேசுகின்ற மக்களில் பெரும் பாலோருடைய உள்ளங்களை, வியக்கத்தக்க முறையில் கவர்ந்திட வேண்டும் மேலும் அம்மதத்தின் மதக் கோட்பாடுகளின் இரகசியங்களை உள் நுழைந்து பார்க்கக்கூடிய வழிவகைகளை அமைத்திடல் வேண்டும். தென் இந்தியாவிலும், வட இலங்கையிலும் ஒவ்வொரு வகைகளிலும் சைவ சமயமே, உண்மையான மதமாக இருக்கிறது சைவசித்தாந்தக் கொள்கையே, மற்றைய கொள்கைகளை விடப் பின்பற்றப் பெறுவதாயும், அதற்குரிய தகுதி வாய்ந்ததாகவும் இருக்கிறது.

சைவசித்தாந்த முறையே, இந்தியாவில் உள்ள பல்வேறு வகையான முறைகளுக்குள்ளே மிகவும் விளக்கமானதாகவும், கவர்ச்சி கரமானதாகவும், சந்தேகமின்றி ஆத்மீக மதிப்பு உடையதாகவும் இருக்கின்றது. அது தென் இந்தியாவில் உள்ள தமிழர்களுக்கே உரித்தாய தனித்த ஒரு மதக் கோட்பாடு. அவர்களைப் புரிந்து கொள்ள விரும்புகின்ற அல்லது அவர்களது உள்ளங்களைக் கவர விரும்புகின்ற ஒவ்வொருவரும் அதை நன்ருகப் படித்திட வேண்டும்.

[தொடரும்]

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ
சிவ சிவ
சிவ **அருள் மொழி அமுது** சிவ
சிவ சிவ
சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி,
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

## 29. E. புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
## (அப்பர் சுவாமிகள் சரித்திரம்)

திருப்பூந்துருத்தியிலிருந்தபோதே அப்பருக்குத் தனது உடலை உதறி இறைவன் திருவடி சேர வேணுமென்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது போலும்! அதனாலேயே "இருப்போம் திருவடிக்கீழ்" என்னும் குறுந்தொகை பாடினார். அங்கு ஒரு திருமடம் உண்டாக்கி அதில் தங்கினார். பாண்டி நாட்டில் சைவந் தழைக்கச்செய்து சமணத்தை வென்று வாகை சூடிய சம்பந்தப்பெருமான் வருவதையறிந்து, சமணத்தில் சிறிதுகாலம் இருந்த தாழ்வான உடல்கொண்டு சம்பந்தப் பெருமானின் முத்துச் சிவிகையைத் தாங்க எண்ணி, கூட்டத்துடன் கலந்து சம்பந்தரின் திருச்சிவிகையைத் தாங்கினார். ஞானசம்பந்தர் திருப்பூந்துருத்தி வந்ததும் 'அப்பர் எங்கே! எனக் கேட்க" தங்கள் திருவடிகளைத் தாங்கி இதோ வரும்பேறு பெற்றேன்" என்றார்.

*திருஞான மாமுனிவர் அரசிருந்த பூந்துருத்திக்கு*
*அருகாக எழுந்தருளி "எங்குற்றார்? அப்பர்!" என*
*உருகா நின்று உம்மடியேன் உம் அடிகள் தாங்கிவரும்*
*பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற்றேன் என்றார்.*

பிள்ளையார் திடுக்கிட்டுக் கீழே இறங்க ஒருவரையொருவர் வணங்கினர். சம்பந்தப் பெருமான் மூலம் பாண்டிய நாட்டின் செய்திகேட்டு அங்கு செல்ல எண்ணி திருப்புத்தூர் வழியாக மதுரை சேர்ந்து சொக்கலிங்க மூர்த்தியை வணங்கினார்.

திருச்சிற்றம்பலம்

மூளைத்தானை எல்லோர்க்கும் முன்னே தோன்றி
முதிரும் சடைமுடிமேல் முகிழ் வெண் திங்கள்
வளைத்தானை: வல்லசுரர்கள் புரங்கள் மூன்றும்
வரைசிலையா? வாசுகி மாநாணுக் கோத்து
துளைத்தானைச் சுடுசரத்தால் துவளநீறு
தூமுத்த வெண்முறுவல் உமையோடாடித்
திளைத்தானைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேனுனே.

திருச்சிற்றம்பலம்

பாண்டியன் — பாண்டிமாதேவி — குலச்சிறையார் மூவரும் வந்து அப்பரை எதிர்கொண்டழைத்தனர். அரசன் சம்பந்தரை, தான் சமண சமயத்திலிருந்ததால் எதிர்கொண்டழைக்கவில்லை. சம்பந்தரை எதிர்கொண்டழைத்த அரசியை வளவர்கோன் பாவை எனக்குறிப்பிட்டார். இங்கு அரசன் சைவனுகி வந்து எதிர்கொண்டழைத்தான். அரசியையும் பாண்டிமாதேவி எனக்குறிப்பிடுவது நோக்கியின் புறத்தக்க தொன்ருகும். பின்னர் திருப்புவனம் சென்று இறைவனது காட்சி கிடைக்க உவகையெய்திப் பாடினுர்

திருச்சிற்றம்பலம்

வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்
வளர் சடைமேல் இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில் வெண்குழைத்தோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழும் திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில் திகழும் புவணத்தெம் புனிதனுர்க்கே.

திருச்சிற்றம்பலம்

பின்னர் ராமேஸ்வரம், திருநெல்வேலி, காளையார்கோயில் முதலான இடங்களுக்குச்சென்று தொழுதுபுகலூர் வந்தடைந்து பல பாடல்கள் பாடினுர்.

நின்ற திருத் தாண்டகமும் நீடுதனித் தாண்டகமும்
மன்றுறைவார் வாழ்பதிகள் வழுத்து திருத்தாண்டகமும்
கொன்றைமலர்ச் சடையார்பால் குறைந்த திருநேரிசையும்
துன்று தனி நேரிசையும் முதலான தொடுத் தமைத்தார்.

குறிப்பு: பின்னெரு சமயம் பிஞ்சு தமிழ் என்ற தலைப்பில் சம்பந்தர் தேவாரத்தையும், கெஞ்சு தமிழ் என்ற தலைப்பில் அப்பரது தேவாரத்தையும், மிஞ்சு தமிழ் என்ற தலைப்பில் சுந்தரர் தேவாரத்தையும், கொஞ்சு தமிழ் என்ற தலைப்பில் திருவாசகத்தையும் எழுத இறைவனருளால் திட்டமிட்டிருப்பதால் வெகு சில பாடல்களையே இங்கு காட்டுகிறேம். சுருக்கமாக அமைத்துள்ளதற்காக அன்பர்கள் பொறுத்தருளவேண்டுகிறேம்.

ஸ்ரீ ராமநாமப்பரதேசி.

நின்ற திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

இருநிலனய்த் தீயாகி நீருமாகி
இயமானனய் எரியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிருகி:
ஆகாசமாய் அட்டமூர்த்தியாகி
பெருநிலமும் சுற்றமும் பெண்ணும்
ஆணும் பிறருருவும் தம்முருவும் தாமேயாகி
நெருநலையாய் இன்ருகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே.

தனித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அப்பனீ அம்மை நீ ஐயனும் நீ அன்புடைய
மாமனு மாமியு நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளுநீ
ஒருகுலமும் சுற்றமும் ஓருருநீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என்நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணி நீ இம்முத்து நீ
இறைவனீ ஏறூர்ந்த செல்வன் நீயே!

திருச்சிற்றம்பலம்

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணுதாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே,

திருச்சிற்றம்பலம்

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர்திறம் ஒருகால் பேசாராகில்
ஒருக்காலும் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன் முன் மலர் பறித்திட்டுண்ணாராகில்
அருநோய்கள் கெட வெண்ணீறணியாராகில்
அளியற்றார் பிறந்தவாறேதோ வென்னின்
பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்தும்
செத்தும் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.

திருச்சிற்றம்பலம்

தனித்திருநேரிசை

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே.

திருச்சிற்றம்பலம்

ஆருயிர்த் திருவிருத்தம்

எட்டாந்திசைக்கும் இருதிசைக்கும் இறைவா! முறையென்று
இட்டாரமரர் வெம்பூசல் எனக்கேட்டு எரிவிழியா
வொட்டாக் கயவர் திரிபுர மூன்றையும் ஓரம்பினால்
அட்டான் அடிநிழற்கீழ தன்றோ என்றன் ஆருயிரே.

திருச்சிற்றம்பலம்

இவ்வாறெல்லாம் பாமாலைசாத்திப் புகலூரில்தங்கியிருந்த அப்பரை இறைவன் மேலும் சோதித்தான். மண் வெட்டியெடுத்து தோட்டத்தைச்செம்மைப்படுத்தும் காலத்தில் மண்ணுடன் பொன்னும் நவரத்தினங்களும் வருமாறு செய்தான். ஓடும் பொன்னும் ஒக்க நோக்கும் சிவநேசச் செல்வரான அப்பர் அப்படியே அவற்றைத் தூக்கிப் பக்கத்திலிருந்த குளத்தில் எறிந்தனர்.

செம்பொன்னும் நவமணியும் சேண்விளங்க அங்கெவையும்
உம்பர் பிரான் திருமுன்றில் உருள் பருக்கையுடன் ஒக்க
எம்பெருமான் வாகீசர் உழவாரத்தினில் ஏந்தி
வம்பலர் மென்பூங்கமல வாவியினில் எறிந்தனரே.

தேவருலகப் பெண்கள் திருப்புகலூர் வந்திறங்கி ஆடியும் பாடியும் அப்பரை மயக்கப் பார்த்தனர். பெண்ணுசை

உடல் வலி குன்றினல் நீங்கும். பொன்னாசை நீங்கவே நீங்காது. அப்பர் சுவாமிகளை இரண்டு ஆசைகளும் ஒன்றுமே செய்யவில்லை. ''உங்களால் எனக்கு ஆக வேண்டியதொன்றுமேயில்லை'' என தனது புண்ணிய பாவங்களையே பாடினர். பெண்கள் வெட்கமடைந்து வணங்கிச் சென்றனர்.

கடைசியாக.

திருச்சிற்றம்பலம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனே?
எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்
கண்ணிலேன் மற்றோர்களை கணில்லேன்
கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போதுணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

திருச்சிற்றம்பலம்

எனப்பாடிக் கரைந்து இறைவனுடைய திருவடியில் சிவானந்தப் பெருவாழ்வு பெற்றார்.

பொய்யான சமணத்திலிருந்து விடுபட்டு, சமணர்கள் செய்த துன்பத்தை எல்லாம் பொறுத்து இறைவனருளால் நீங்கப்பெற்று, சமணமதத்திலிருந்த உடல் எனத் தன்னை வெறுத்து, அவ்வுடல் பரிசுத்தமடைய வேணுமென ரிஷப சூல முத்திரைகளை உடம்பில் பெற்று, இறைவனுடைய திருவடியைத் தலைமேல் ஏற்கும்பேறுபெற்று, ஞானசம்பந்தப் பெருமானின் திருப்பல்லக்கைச் சுமந்தால் உடல் பரிசுத்தமடையும் என எண்ணி அவ்வாறே பேறுபெற்று, சமணர் மறைத்து வந்த இறைவனின் திருவுருவை பழையாறையிலே வெளிப்படுத்தி வணங்கி, திருமறைக்காட்டுக் கதவைத்திறந்து தரிசித்து படிக்காசு பெற்று உலகத்தவர் பசிப்பிணி நீக்கி, தனக்குப் பசிஏற்பட்டபோது இறைவனிடமே உணவுஉண்டு பூவுலகிலேயே கைலாயத்தைக் கண்டு, பெண்ணாசை பொன்னாசைகளை அறவே ஒழித்து இறைவன் திருவடிக்கே வரு

கிறேன் புண்ணியாஉன்னடிக்கேபோதுகின்றேன் என்றுதிருவடி யடைந்து, தானும் இன்புற்று, தேவாரப் பாடல்களால் உல கினரையும் இன்புறச்செய்யும் உத்தமரான அப்பர் திருவடி வணங்கி அவரது பாடல்களை உண்மையுணர்ச்சியுடன் பாடிப் பரவசப்பட்டு பக்தி செய்வது தவிர அப்பெருமகனுருக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்! அவர் திரு நாமம் வாழ்க! சித்திரைச் சதய நாளில் சிவனுடன் கலந்த திருநாவுக்கரசர் திருவடிகளே சரணம்.

தேவரெலாம் தொழுந்தலைமை தேவர் பாதத்
திருமலரை முடிக்கணிந்து திகழ்ந்து நின்ற
நாவரசே; நான்முகனும் விரும்பும் ஞாந
நாயகனே! நல்லவர்க்கு நண்பனே! எம்
பாவமெல்லாம் அகற்றியருள் பான்மை நல்கும்
பண்புடைய பெருமானே! பணிந்து நின்பால்
மேவ விருப்புறும் அடியர்க்கு அன்பு செய்ய
வேண்டினேன் அவ்வகை நீ விதித்திடாயே.

— ஆளுடை அரசுகள் அருள்மாலை
— ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள்.

''வாழிய உலகமெல்லாம்''
திருச்சிற்றம்பலம்.

307 304

சிவ சிவ

# ஞானசம்பந்தரும் நற்றமிழும்

தத்புருஷ தேவநாம
திரு, சு இராமலிங்கம் அவர்கள்,
கணித ஜோதிடர், ஸ்ரீ மாணிக்கவாசகர் இல்லம்
சீகம்பட்டி, K. புதுப்பட்டி P.o
இலாலாப்பேட்டை வழி, திருச்சி ஜில்லா

———

திருச்சிற்றம்பலம்

3. மையாரொண் கண்ணார் மாட நெடுவீதி
கையாற் பந்தோச்சும் கழிசூழ் தில்லையுள்
பொய்யாமறை பாடல் புரிந்தானுல கேத்த
செய்யானுறை கோயில் சிற்றம்பலந் தானே.

திருச்சிற்றம்பலம்

இரண்டாவது திருப்பாசுரத்திலே, சிவபெருமானை மறவாமலிருப்பவர் பொருளல்லவற்றை பொருளென்றுணரும் மயக்கந் தீர்ந்து இறைவனைப் பற்றின வராவார் என்று அருளினார் முத்தமிழ் வித்தகர். மறக்கின்ற தன்மையை இயல்பாகவுடைய மனத்தால் மறவாமல் இருப்பது எப்படி? என்னும் வினாவிற்கு விடை மூன்றாவதாகிய இந்தத் திருப்பாசுரத்திலே, இறைவனை ஏத்த வேண்டும். என்கிறார். நம்முடைய அறிவின் திறத்தால் சிற்சபேசனை மறவாமல் நினைந்து கொண்டே இருக்க வேண்டும் என்று எண்ணினால் நிச்சயமாக மறந்து விடுவோம். பின் எப்படி என்னில், நாம் நினையாது இருந்தாலும் அவன் நினைப்பித்தருளினால் நாம் நினையாமலிருக்க முடியாது. யாருக்கு அப்படி நினைவைத்தருவானென்றால், நாள்தோறும் ஏத்தும் அடியார்கள் தன்னை ஒருகால் நினையாமல் இருந்தாலும் அப்படி இருக்கவொட்டாது. இளங்கன்றைப் பிரிந்த தாய்ப் பசு கதறுமாப் போலே கதறச் செய்து தன்னை அதிகமாக நினைக்க அருளுவானும். இதற்கு பிரமாணம் திருவிசைப்பாவில்,

திருச்சிற்றம்பலம்

நின்றுமிருந்துங் கிடந்தும் எழுந்து தொழும்தொழும்பனேன்
ஒன்றியொருகால் நினையாது இருந்தாலும் இருக்கவொட்டாய்

*கன்றுபிரி கற்றுப்போல் கதறுவித்தி வரவு நில்லாய்*
*நன்றிதுவோ திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே.*

'என்பதால் தெளியலாம். ஏத்துவதுஎன்றால் இறைவனைதுதிப்பது என்று பொருள், இவர்களைமாத்திரம் ஏன் அப்படி நினைக்க அருளுகிறானென்றால், ஏத்துவாருள்ளமே தனக்கு கோயிலாக கொண்டு உள்ளே இருக்கிறபடியால் அப்படி அருளுகிறான். எப்பொழுது ஏத்துகிறது எப்படி ஏத்துகிறது என்று விதிமுறை உண்டு சிவபெருமானுடைய திருவடியிலே,பழுதிலாத புதிய மலரால் அருச்சித்து மனமுருகி, முகமெலாங் கண்ணீரால் நனைய அழுது பணிந்து ஏத்த வேண்டும். இந்த முறையில் ஏத்துகிறவர் உள்ளமே சிவபெருமானுக்கு பிரியமான கோயிலாகும். இதைவிட வேறு கோயில் இல்லையாம். இதற்கு பிரமாணம், நான்காந் திருமுறையிலே திருநாவுக்கரசு சுவாமிகள்.

*''சகமலாதடிமையில்லை தானலால் துணையுமில்லை*
*நகமெலாந் தேயக்கையால் நாண்மலர் தொழுது தூவி*
*முகமெலாங் கண்ணீர்மல்க முன்பணிந் தேத்துந் தொண்டர்*
*அகமலாற் கோயிலில்லை ஐயன் ஐயாறனார்க்கே''*

என்று அருளுகிறார்.

பிரம விஷ்ணு முதலான தேவர்களும் சிவபெருமானை ஏத்துதற்கு, நமக்குத் தகுதியில்லையே என்றும் என்ன திருத்தொண்டு செய்தால் மகிழ்வானே என்றும் கூசியும் தெரியாதும் திகைக்கின்ற தன்மையையுடையவனும் எல்லையில்லாத ஆற்றலும் எல்லையில்லாத ஞானமும் உடையவனாய், தானே சகலத்திற்கும் காரணனாய் தனக்கு யாதொருகாரணமுமில்லாதவனாய் புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே உண்டியாய் அண்ட வாணரும் பிறரும் எலும்பெல்லாம் வற்றிப் போகும்படி தவஞ் செய்வோருங் காணுதற்கரியவனாய், வாக்கு மனங்களுக்கு எட்டாதவனாய், எங்கும் நிறைந்தவனாய் ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெருஞ் சோதியாய் விளங்குகின்ற சிவபெருமானை மும்மலமாகிய கல்லிலே அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டுண்டு புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலாகிய சிறையிலே சிற்றறிவுஞ் சிறு தொழிலுமுடையவர்களாகிய

நாம் அவனை ஏத்துவதென்றால் முடிந்த காரியமா, நமக்கு என்ன தெரியும். நாம் எங்கே அவனெங்கே, மாலறியா நான் முகனும் காணு மலையினை நாம் போலறிவோம் என்றுள்ளப் பொக்கங்களே பேசும் என்று மாணிக்கவாசகசுவாமிகள் அருளியது போல் ஏத்துவதும் அடைவதும் பொய்யாகவே முடியும். முடியவே நம்மால் ஆவது ஒன்றுமில்லை இவற்றை யெல்லாம் திருவுளத்திலே கொண்ட சிவபெருமான் நம்மை ஏத்தி உயிர்கள் உய்தி பெற வேண்டுமென்றெண்ணி, எல்லை யில்லாத கருணையினாலே தனது நெறியிலே நின்றவர்களுக்கு அருள் கிடைப்பதில் வழுவிலாத இருக்கு யஜுர்சாமம் அதர் வணம் என்கிற நான்கு வேதங்களையும் காமிக முதல் வாதுள மீறாகிய இருபத்தெட்டாக மங்களையும் அருளித் தந்துள்ளான், சிவபெருமான் நமக்கு அளித்த எல்லா உதவிகளிலும்வேதாகம உதவி மிகச் சிறப்பான உதவியாகும். அவன் அப்படி வேதா கமங்களைக் கருணையினால் அருளிச் செய்யாவிட்டால், நமக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நான்கு பொருளும் தெரியாமல் அறிவில்லாத குருடர்களாகி விடுவோம். என்பது, திண்ணம் இதற்கு பிரமாணம் சிவஞான சித்தியாரில்,

ஆரணமாக மங்களருளினாலுருவு கொண்டு
காரணன் அருளானுகில் கதிப்பவரில்லை யாகும்
நாரணன் முதலாயுள்ள நரர்சுரர் நாகர்க்கெல்லாம்
சீரணிகுரு சந்தானச் செய்தியும் சென்றிடாவே.

என்னும் திருப்பாட்டால் இனிது விளங்கும் விளங்கவே இந்த வேத ஆகமமென்னும் இரு நூல்களும் எல்லா நூல்களுக்கும் முதனூலாகும். உலகில் தோன்றிய எல்லா நூல்களுக்கும்மூல நூல் இதுவேயாகும். மற்றெல்லா நூல்களும் இதிலிருந்து தோன்றியதாகும். தெய்வ நம்பிக்கையுடையவர்களில் சத்தி நிபாதம் பெருதவர்களும் சத்திநிபாதம் பெற்றவர்களுமென இரு பிரிவுண்டு இதனால் சத்திநிபாதம் பெருதோர் பொருட்டு வேதத்தையும் பெற்றவர்கள் பொருட்டு, ஆகமத்தையும் அருளிச் செய்துள்ளார். ''சத்திநிபாதர்க் கமலன் சாற்றினை கம நூல். மற்றையர்க்கு காண் வேத வாக்கு'' என்பதனால் விளங்கும் ஆகமத்தில் சிவபெருமான், தன்னைப் பற்றியும்

நம்மைப் பற்றியும் நம்மைப் பற்றியிருக்கின்ற பாசத்தைப் பற்றியும் அப்பாசத்தை விட்டு, தம்மையுணர்ந்து திருவடியில் சேரும் உபாயத்தையும் அருளியுள்ளார். அவற்றை முதலிலே உமாதேவிக்கு அருளிச் செய்தார். அவள் முழுவதுங் கேட்டு, பரமானந்த மெய்தி எண்ணில்லாத ஆகமத்தை அருளிய தேவ ரீருக்கு மிக விருப்பமான செயல் என்னவென்பதை அருள வேண்டும் என்று கேட்டருளினுள். அதற்கு சுவாமியானவர், நமக்கு பூசைதான் மிக விருப்பமென்றருளினுர். இதற்கு பிர மாணம் பெரியபு ராணத்திலே,

எண்ணிலாகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என்றுரைத் தருள
அண்ணலார் தமை அருச்சனை புரியவாதரித்தாள்
பெண்ணில் நல்ல வளாயின பெருந்தவக் கொழுந்து.

என்பதால் தெளியலாம். தெளியவே வேதாகமங்களின்முடிந்த முடிபான கருத்து. சிவபெருமானை சிவாகம முறைப்படி பூசை செய்து ஏத்துதல் என்பதே உறுதி உண்மையாக சிவ பெருமானை அடைய வேண்டும் என்ற எண்ணம் உடையவர் கள் சிவாகமங்களைக் கற்றுணர்ந்த பெரியோர்களை அடுத்து, சிவாகம முறைப்படி தீக்ஷை பெற்று சிவபெருமானைப் பூசிக்க வேண்டும் பூசித்தால் சிவபெருமானை அடையலாம் ஆகமங் களிலே சொன்ன அறநெயில் நடப்பதைவிட வேறு நன்மை யில்லை அவற்றை மறப்பதைவிட வேறு கெடுதலுமில்லை இதற்குப் பிரமாணம்; முதுமொழி மேல் வைப்பு என்னும் பெரு நூலில்.

தண்டிக்கருள் புரிந்து தக்கன் சிரமறுக்கும்
அண்டர்பெரு மானருளு மாகமத்திற் கண்ட
அறத்தினூங் காக்கமுமில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

என்னும் திருப்பாட்டால் தெளியலாம். வேத சிவாகமங்களை ஞானசம்பந்தர் முதலாகிய அருளாளர்கள். தம் தலையின் மேல் வைத்து துதித்து திருமுறைகளிலே பலவிடங்களிலே பாடி யருளுகிறுர்கள். அவற்றுட் சில வருமாறு: திறங் கொண்ட அடியார் மேல் தீவினை நோய் வாராமே அறங் கொண்டு சிவ

தன்மம் உரைத்த பிரான், (ஞானசம்பந்தர்) பணையிலாகமம் சொல்லுந் தன் பாங்கிக்கே, (அப்பர்) அம்மானே ஆகம சீலர்க்கருள் நல்கும், (சுந்தரர்) ஆகமமாகி நின்றண்ணிப் பான்றாள் வாழ்க, (மாணிக்கவாசகர்) நாலான வேத நூலாக மாதி நானோதினேனுமிலை வீணே சிவகலைகளாக மங்கள்மிகவு மறையோதுமன்பர். திருவடிகளை நினைந்து துதியாமல், (அருணகிரிநாதர்) இப்படி இன்னும் எத்தனையோ பெரியோர் கள் புகழ்ந்து துதிக்கின்றார்கள், உலகிலே ஆகமத்தைப் போற்றுகின்ற பெரியோர்களுக்கும், அவற்றை அருளிய சிவ பெருமானுக்கும், பக்தர்களென்று சொல்லிக் கொள்ளுகிற, கற்றுணராப் பெரியோர்கள் பலர். வேத சிவாகமங்களையும் அதிலே சொல்லப்பட்ட நெறியையும் அவற்றைக் கற்றுணர்ந்த பெரியோர்களையும் இகழ்ந்து தள்ளிவிட்டு தம் மனம் சென்ற வழியிலே பத்தி செய்து முத்தியடைய விரும்புகிறார்கள் இவர் களுடைய செயல், அரசனுடைய சட்டத்தை இகழ்ந்துவிட்டு அரசனால் நன்மை பெற விரும்புவது போலவும், வைத்தியன் சொன்ன முறையை இகழ்ந்து விட்டு வைத்தியனால் நோய் நீக்கம் பெற்று சுகமடைய விரும்புவது போலவும் உள்ளது. ஒருக்காலும் இவர்களுக்கு சிவனருள் கிடைக்காதென்பதும், நரகம் கிடைக்குமென்பதும் உறுதி உறுதி, உறுதி இதற்குப் பிரமாணம் சிவதருமோத்தரத்தில்,

> ஒப்பிலிய நாதி முத்தனோதிய வேதமாதிக்
> கொப்புயர் வுரைப் பார்நிந்தை யுரைப்ப வருன்னு வாரும்
> வெப்பெரி நிரயந் தன்னுள் வீழ்ந்து வெந்துருகி வீயா
> ரெப்பொழு தேறுவா மென்றிளைத் திளைத்தேங்கு வாரே.

சிவஞான சித்தியாரில்,

> அருளினாலுரைத்த நூலின் வழிவராத தன்மஞ் செய்யின்
> இருளுலாம் நிரயத் துன்பத்திட்டிரும் பாவந் தீர்ப்பான்
> பொருளுலாஞ் சுவர்க்கமாதி போகத்தாற் புணியந் தீர்ப்பள்
> மருளுலா மலங்கள் தீர்க்கும் மருந்திவை வைத்தியனாதன்.

என்பதால் விளங்கும் விளங்கவே, சிவாகமத்தில் கூறியருளிய முறையிலே ஆசாரிய அபிஷேகம் பெற்ற, சிவகுருவினிடத் திலே தீக்ஷை பெற்று சிவபெருமானை முறைப்படி பூசித்து,

திருமுறைகளால் ஏத்தினால் சிவபெருமான் உள்ளத்தேஇருந்து மறக்கவிடாது நினைப்பித்தருளுவார் திருநீலகண்டப் பதிகத்திலே,

மறக்கும் மனத்தினை மாற்றியெம் மாவியை வற்புறுத்தி
பிறப்பில் பெருமான் திருவடிக் கீழ்ப் பிழையாத வண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்துதும் பணியடியோம்
சிறப்பிலி தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்,

என்னும் பாடலும், நற்றவாவுனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே என்னும் திருவாக்குகளும் சிந்திக்கற் குரியது. சிவாகம முறையை நீக்கிவிட்டு சிவனுக்கு பக்தர்களென்று சொல்வது போலி வேடமும் பெரும் பாவமுமாகும், ஆகவே சிவாகம முறைப்படி ஏத்துவதுதான் கல்வியினாலும் பிறவியினாலுமாகிய பயன். இத்தனை அற்புதக் கருத்துக்களும், ஒரே அடியில் மிக அழகாக,

பொய்யா மறைபாடல் புரிந்தானுல கேத்த
செய்யானுறை கோயில் சிற்றம்பலந் தானே,

என்று அருளுகிறார். மறவாது ஏத்துவதினால் பயன் என்ன என்பதை அடுத்த திருப்பாசுரத்தில் அருளுகிறார், திருஞான சம்பந்த சுவாமிகள்.

திருஞானசம்பந்தர் திருவடி வாழ்க!!

———

(தொடரும்)

# முத்தும் - முத்தமும் (5)

திருமதி, ப. உமாதேவி அவர்கள்,
9/49 திரௌபதியம்மன் கோயில் தெரு
அரியாங்குப்பம்—புதுவை-7

பாடலைக் கேட்கும் பரமாசாரியன் தன்னை மறந்து நின்ற வனுய்த் தலையினை அசைக்கின்றான். அது குழம்பும் புலவருக்குத் தெளிவைத் தருகின்றது. அவர் மனதில் எழுந்த ஐயங்களுக்கெல்லாம் விடை கிடைத்து விடுகின்றது. முத்தமிழ்க் குமரன் எதிர்பார்ப்பது. முத்தம் வேண்டும் தன்னிடம் வேண்டுவது எது என்பது புரிந்து விடுகின்றது. அவ்வளவுதான் புலவர் தன்னை மறந்து தமிழுடன் ஒன்றி விடுகின்றார். ஆயினும் தான் எதிர்பார்ப்பதை, வேண்டுவதை மட்டும் மறக்கவில்லை. தன் மனங்குளிர வேண்டுமானால் அவன் அகங்குளிர வேண்டும் என்பதையறிந்து கொள்கின்றார். எனவே தன்னுடையத் திறமையைச் செந்தமிழ்ப் பாவின் மூலம் சிறிது சிறிதாகக் காட்டுகின்றார். முதலில் செந்திற் பதியின் வளத்தைக் கூறினார். பின்னர் அவன் கோயில் கொண்டுள்ள திருநகரின்கண் வாழும் உயிர்களின் இன்பத்தையும், மகிழ்வையும் கூறினார். மக்கள் மட்டுமன்றி பகுத்தறிவு அற்ற கீழின உயிர்கள் அடையும் இன்பத்தினையும் கூறி அவனை மகிழ்விப்பர். இப்போது அவனை வரவேற்பதில் முனைந்து விடுகின்றார்.

தன்னை நோக்கி வரும் குமரனை அவனுடையப் புகழைச் செவியாரக் கேட்டு மகிழும் வண்ணம் மனமார, நாவாரப் பாடுகின்றார். அளவற்ற பக்தியால் வரும் மிக்கப் புகழை விரும்பியவர்களாய், நின்பால் இடையறாத, மாசற்ற அன்பு கொண்ட அடியார்களின் பிறவித்தளையை யறுத்து அவர்களுக்கு நிலையானதும் பேரின்பம் தரக்கூடியதுமான வீட்டுலகத்தைக் கொடுப்பதற்கென்றே பாலகன் வடிவில் வந்தவனும், மிக்க புகழையுடையவனுமான, இளையபெருமானானக் குமரப் பெருமானே! உன்னைப் பணிந்து நின்பக்கல் சேர்ந்து அருள் பெற்றுய்யாத நிருதர்களின் குலத்தினை வேரு

டன் அழிக்க வந்திருப்பதால். கொடிய அசுரர்களின் குலத்திற்குக் காலனாக அமைந்தவனே! சேவலைக் கொடிதனில் சின்னமாகக் கொண்டவனே! திருச்செந்தூர்ப் பதியின் தலைவனே! என்றெல்லாம் உன் அழகியத் திருமுக மண்டலத்தைப் பார்த்து அதனால் பரவசமுற்றுப் பலவாறு உன்னைப் புகழ்ந்து கூறி என் அப்பனே இங்குவா என்று அன்புப்பெருக்கால் உன்னை அடியார் அழைக்கும்போது நீ அதனை மறுத்து வராதிருக்க இடமுண்டோ? இல்லையல்லவா? எனவே வடிவேல் தாங்கி நிற்கும் முருகனே வருக என்று அழைக்கின்றார்

பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமா னென்னும் பேராளா
சேரா நிருதர் குலகாலா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்
பாரா: மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வாவென் றுனைப் போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாராதிருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளிக் கணவா வருகவே

என்று வரவேற்புரைப்பவர், அவனுடைய புகழையும், அருளையும் கூறும் போதே அவன் கடமையையும் எடுத்துக் கூறுகின்றார். நீ உன்னை நாடி வந்தவர்கள் மனம் மகிழ அருள் செய்பவன் அடியவரின் பிறவிப் பிணியை யகற்றுபவன். நானும் உன்னைப் போற்றும் அடியவன்தானே! என்னை மட்டும் நீ எப்படிப் புறக்கணிக்கலாம் என்பது அவருடைய மறைமுகமானத் தாக்குதல். இரண்டாவதாக அவனை "சேரா நிருதர் குலகாலா" என்றழைக்கின்றார். உன்னடியை தஞ்சமடையாத கொடிய அரக்கர் குலத்துக்குத்தான் நீ காலனே

தவிர, உன் திருவடியைப் புகலடைந்தவர்களுக்கு அல்ல அப்படியிருக்க நீ ஏன் என்னைப் புறக்கணிக்கின்றாய்? என்று கேட்பவர் மேலும் அவனை வசமாகச் சிக்கவைக்க "சேவற் கொடியாய்" என்கின்றார். உன்னைப் புகலடையாதவரை நீ அவர்களை யழித்தாய். ஆனால் சேவலும், மயிலுமாக வந்த கொடிய குணமும், சொல்வதற்கரிய ஆற்றலும் கொண்ட நிருதர் குலத் தலைவனை நீ ஏற்று அருள் செய்தாய். அவ்வாறிருக்க ஆற்றலற்ற, எளிய மானிடனை என்னை நீ வெறுத்துத் தள்ளுதல் எப்படி முறையாகும்? தேவர்களைச் சிறைமீட்ட உனக்கு, என்னை ஐம்புலச் சிறையில், பிறவியாகியத் தளைபூண்டு வாடும் என்னை விடுவிக்க இயலாதது ஒன்றா? உன்னைப் பாலூட்டி வளர்க்கும் தாயார்கள் எப்படிப் புகழ்ந்து அருமையுடன் அழைப்பார்களோ அதை விடப் பன்மடங்கு உன்னைப் பாராட்டி அழைக்கின்றேன். அதனை நீ அலட்சியப் படுத்துதல் நியாயமாகுமா? என்றெல்லாம் தன் உள்ளக் குமுறலை இந்தப் பாடலில் மறைமுகமாகக் கொட்டுகின்றார்.

முருகனை மறைமுகமாகத் தாக்கியவின் புலவர் விழித்துக் கொள்கின்றார் பச்சிளம் பாலகனை மறைமுகமாகத் தாக்கியது மனதை வாட்டுகின்றது. மேலும் எங்கே அவன் தான் கேட்கும் வரத்தையளிக்காமல் ஓடிவிடுவானோ என்ற அச்சமும் எழுகின்றது. எனவே அவன் மனதை தன்பால் இழுக்க அவசர அவசரமாக அவனுடைய பெருமைகளை எடுத்தோதுகின்றார். சலைசள் மலிந்த சீர்காழியில் கவுணிய குலத்தில் தோன்றி அம்மையிடம் ஞானப்பாலுண்டு, திருஞானசம்பந்தர் என்னும் பெயர் தாங்கி பதிகம்பாடிய சிறப்பையும், அவரால் சைவந்தழைத்ததையும் விதந்தோதுகின்றார். அடியவர்களின் துன்பங்கள் நீங்குமாறு அடியெடுத்து வரும்படி வேண்டுகின்றார். வில்போன்ற புருவங்களையுடைய எழில் நங்கையரான கார்த்திகைப் பெண்களின் மனம் மகிழ்ச்சி கொள்ளுமாறு வரும்படி அழைக்கின்றார். அப்படி வருவதால் சிறிய வியர்வை முத்துக்கள் உனது மலர்ந்த அழகிய திருமுகத்தில் துளிர்க்கும் என்றாலும் நீ அதனால் வருந்தாது மலர்ச்சியுடன் வருவாயாக என்று ஆறுதல் தருகின்றார். நீ வருவது எனக்கு

அருள மட்டுமன்று கொலைத் தொழில் செய்து அனைவரையும் துன்புறுத்தும், மணிமுடி தரித்த நிருதர்களின் குலத்தையழிப்பதற்காகவும் இருக்க வேண்டும். அதாவது அப்படி நிருதர்கள் எண்ணிக் கலங்கும்படியாக உன் வருகை இருக்க வேண்டும் என்பது உட்குறிப்பு. வயிரமணிகள் இழைக்கப் பெற்ற தலையாபரணம் பூண்ட உன் எழில் மிக்க தலையினின்று தோளில் தவழும் தலைமுடியில் நீவரும் வேகத்தால் உன் காதுகளில் அணியப்பெற்ற குழைகள் மோதும்படி வருவாயாக என்று அழைக்கின்றார். நீ வேகமாக வரவேண்டும் என்பதையே நயமாக, ''குருமணி வயிரம் இருசிகை நெடிய குழை பொர வருகவே'' என்று அழைக்கின்றார். மேலும் சிறார்களுக்குப் பிடரிவரைமுடி இருக்கும் என்பதும். அதனை அன்னையர் பலபட அழகு படுத்துவர் என்பதும் இலக்கியம் காட்டும் உண்மை. எனவேதான் புலவரும் காதில் உள்ள குழை சிகையுடன் உறவாட வரவேண்டும் என்கின்றார். அப்படி வருபவன் எளியவனா? எனவேதான் அவன் உயர்வைக் காட்ட மலைமகளான கௌரியிடம் பாலருந்திய களிறு போன்ற வீரமுடையவனே வருக என்று அழைக்கின்றார்.

கலைதெரி புகலி வளமுற மருவு
கவுணிய வருக வருகவே
கருணையின் உரிமை அடியவர் கொடிய
கலிகெட வருக வருகவே
சிலைபொரு புருவ வனிதையர் அறுவர்
திருவுள மகிழ வருகவே
சிறுதுளி வெயர்வு குதிகொள உனது
திருமுக மலர வருகவே
கொலைபுரி விகட மணிமுடி நிருதர்
குலமற வருக வருகவே
குருமணி வயிரம் இருசிகை நெடிய
குழைபொர வருக வருகவே
மலைமகள் கவுரி திருமுலை பருகு
மழவிடை வருக வருகவே
வளையுமிழ் தரளம் அலையெறி நகரில்
வரபதி வருக வருகவே

என்றழைப்பது குழந்தையின் மனத்தையுருக்கி விடுகின்றது. புலவரின் ஆவலை நிறைவேற்றும் மனம் கொண்டவனாய்,

அருள் நோக்குடன் சற்று வேகமாக அடியிட்டு வருகின்றான் அவற்றைப் பார்க்கும் புலவருக்குத் தன் எண்ணம் இனி ஈடேறிவிடும் என்ற உறுதி பிறக்கின்றது. அதனால் உவகை யூற்றுப் பெருக்கெடுத்து மகிழ்ச்சி வெள்ளம் பாய்ந்தோட வார்த்தைகள் தங்கு தடையின்றி அருவியாய்க் கொட்டி ஆற்று நீர்போல் எழிலார்ந்த தோற்றமுடன் வெளிப்படுகின்றது. அவன் தம்மை நோக்கி வரும்போது காணும் கோலத்தை முத லில் குறிப்பிடுகின்றார். தலையில் அணியப் பெற்ற அழகிய நீண்ட திருமுடியில் இலோசாகப் புழுதி படிந்துள்ளது என்றா லும் அது அவன் அழகைக் குறைக்கவில்லை. மாருகப் பூவுடன் சேர்ந்த நார்போல் அவன் முகப்பொலிவால் அழகுடன் திகழ் கின்றது. அடுத்து வேகமாக அடியெடுத்து வைத்து வருவதால் அரையில் தங்கச் சலங்கைகள் கோர்க்கப்பட்ட அரைஞாணில் உள்ள மணிகள் இன்னொலியை எழுப்புகின்றன. அதுமேலும் பேரொலியாகக் கேட்கும்படி வருக என்றழைக்கின்றார். அப் படி அவன் பேரொலி கேட்கும்படி பெரிய அளவில் அடி யெடுத்து வைப்பதை அவனுடன் இருந்து பணிவிடை செய் யும் மடப்பம் பொருந்திய இளமகளிர் புகழ்ந்து ஏத்துகின்ற னர். அது மட்டுமா? பற்பல முனிவர்கள் அனைவரும் உன்ன டிக் கமலத்தைத் தொழுது ஏத்த குழுமி நிற்கின்றனர் அவர் கள் வணங்கி நின்னருளைப் பெறக் கருணை கூர்ந்து வருக. பிணிமுகம் என்னும் யானையின் முதுகில் உள்ள அரியணை மேலும் அழகுபெற்றுத் திகழ நீ அதன்மேல் அமர்ந்து வருவா யாக! பிறை மதியையும், நீர் நிறைந்த கங்கையையும் ஒரு சேரத் தமது சடை முடியில் அணிந்தவரான சிவபெருமானின் இடப்பக்கத்தைத் தழுவியிருக்கும் பெண்யானை போன்ற உமையம்மை பெற்ற ஆண்யானையின் வீரமும்; பெருமிதமும் கொண்டவனாகிய முருகனே வருக! பவளமணி போன்ற அழ கிய சிவந்த இதழ்களினின்று அமுதம் போன்ற எச்சில் ஒழுகி நிற்க குதலைமொழி பேசும் பாலகனே வருக! வருக! என்ற ழைத்து அணைத்துக் கொள்கின்றார்.

அணிநெடு மவுலி எறிசிறு புழுதி
அழகுடன் ஒழுக வருகவே
அடியிடு மளவில் அரைமணி முரலும்
அடியொலி பெருக வருகவே

பணிவிடை புரிய வருமட மகளிர்
பரவினர் புகழ வருகவே
பலபல முனிவர் அணிவரும் உனது
பதமலர் பரவ வருகவே
பிணிமுக முதுகில் அரியணை யழகு
பெறவரு முருக வருகவே
மணியிதழ் ஒழுகும் அமுதுகு குதலை
மழவிடை வருக வருகவே
வளையுமிழ் தரளம் அலையெறி நகரில்
வரபதி வருக வருகவே

இதிலுள்ள நயம் நோக்கத் தக்கதோடு இன்புறவும் வைப்பது. வந்திருப்பவனோ குழந்தைக் குமரன். அவன் புலவரின் பக்திக்கு உருகி தன் அலுவலை விட்டு விட்டு வந்திருக்கின்றான் என்ன அலுவல்? என்பதை புலவர் உணர்ந்து கொள்வதால் அதை "மணி நெடு மவுலி எறி சிறு புழுதி" என்று முதலில் குறிப்பிடுகின்றார். அவனுடைய மணிமுடியில் புழுதி படிந்துள்ளது. புழுதி படியக் காரணம் சிறு குழந்தையாதலால் அவன் விளையாடிக் கொண்டிருக்கின்றான். அவனுடன் பணி மகளிர் உள்ளனர். விளையாட்டில் ஈடுபட்டிருந்தவன் புலவரின் அழைப்பைக் கேட்டதும் விளையாட்டை விட்டு விட்டு பணி மகளிரைத் துறந்து, பிணி முகத்தையும் மறந்து, தன்னை வணங்கக் காத்திருந்த முனிவர்களையும் ஒதுக்கி இவரிடம் ஓடோடி வந்து விடுகின்றான். அதையுணர்ந்த புலவர் நன்றியுடன் புகழ்கின்றார். அப்படி வந்தது தான் விரும்பும் முத்தங்களைத் தரத்தான் என்பதை "வளையுமிழ் தரளம் அலையெறி நகரில் வரபதி" என்று கூறுவதன் மூலம் புலப்படுத்தி விடுகின்றார். ஏனெனில் அவன் அவ்வளவு விரைவாக வந்தது அருள் செய்யத்தான். இடையில் செய்தது வெறும் விளையாட்டு என்பதையும் உணர்ந்து கொள்கின்றார். அரையில் உள்ள கிண்கிணியின் சப்தம் இவர் போன்ற அடியவர்களுக்கு இன்பத்தை தருகின்றது. எவ்வளவு வேகமாக, அதிக ஒலியுடன் அது கேட்கின்றதோ அப்போது இறைவன் நம்மிடம் விரைந்து வருகின்றான் என்றறிந்து மகிழ்ச்சி கொள்ளும் உள்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

316



உயர்மானுடம்—10

# உடலோம்பல் - மருந்து

புலவர் ச. தனுக்கோடிஇராமசாமி பி. ஏ. அவர்கள்,
தமிழாசிரியர் ஆ. வை. உயர்நிலைப்பள்ளி,
சாத்தூர் 626203

'உலகில் தெய்வநம்பிக்கை குறைந்துவிட்டது இல்லையா?' என்று ஒருமுறை பேரறிஞர் பெர்னுட்ஷாவிடம் கேட்டபொழுது 'நம்பிக்கை குறையவில்லை; இடம் மாறியிருக்கிறது. முன்பு கடவுளிடம் வைத்திருந்ததை மாற்றி இப்பொழுது டாக்டர்களிடம் வைத்திருக்கிருர்கள்; அவ்வளவுதான் வேறுபாடு' என்று கூறியிருக்கிருர். அவருடைய மொழியிலிருந்து மக்கள் எவ்வளவு நோய்களுக்கு ஆட்பட்டு அச்சமுற்று டாக்டர்களுக்கு அடிமையாக உள்ளனர் என்பது தெரிகிறது.

மனித வாழ்க்கை அமைதியும் அழகும் நிறைந்து பொலிவுற்று விளங்க உடல்நலம் இன்றியமையாதது. உடல் நலம்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

ளம் அவர்களுடையது அதற்கு மாருக அந்த ஒலி நிருதர்களுக்குக் கிலியாக உள்ளது. அவர்கள் அதைக் கேட்டதுமே காலனின் வரவையுணர்ந்தாற்போல் நடுங்குகின்றனர். முன்பே அவர் முருகனை "நிருதர் குலகாலன்" என்றே குறிப்பிட்டதால் இப்போது அதனை மறைவாகச் சுட்டுகின்ருர். அடியவர்களுக்கு ஆறுதலையும், அரக்கர்களுக்கு அவலத்தையும் தரும்படி உன் இடைமணி ஒலிக்க வேகமாக விரைந்து வா என்றழைக்கின்ருர். வந்தவன் வறிதே திரும்பமாட்டான் என்பதையும், தன் எண்ணம் ஈடேறும் என்பதையும் குறிக்கவே முத்துக்களைக் கூறிய அதே மூச்சில் வரபதி என்றும் குறிப்பிட்டு அழைத்து விடுகின்ருர் விரும்பும் வரங்களை விரும்பியவாறு தரவல்ல அந்த மேலான தலைவனும், அவருடைய அன்பு கலந்த பக்திக்கும் பாமாலைக்கும் பரிசாகத் தன் அருளாகியக் குளிர் முத்தத்தைத் தந்து மறைகின்ருர்.

(நிறைவுற்றது)

சரியான உணவு, அகப் புறத் தூய்மைகளால் அமைவதோடு பயிற்சியையும் பற்றுக் கோடாகக் கொண்டுள்ளது. நோய் வருவதற்கான காரணங்களை 1) உணவு, 2) தூய்மை, 3) பயிற்சி இவற்றில் ஏற்படும் கேடுகளே என்று கூறலாம். இயற்கை மாற்றங்களும் தொற்று நோய்களும் உலகில் நோய்கள் வருவதற்குரிய பொதுவான காரணங்களாகும்

'தூய்மை' 'உணவு' பற்றி முன்னைய கட்டுரைகளில் விரிவாகப் பார்த்தோம் பயிற்சியில் கேடு வருவதாலும் உடல் நலம் பாதிக்கப்படுகிறது. பயிற்சி என்பதை வாழ்க்கை ஒழுங்குமுறை என்றும் கூறலாம். அதாவது வாழ்க்கையின் பல்வேறு செயல் முறைகளில் நிதானத்தையும் ஒரே மாதிரியான ஒழுங்கையும் மேற்கொள்ளுவதாகும்.

காலந்தவறி உண்ணுதல், உணவை அடிக்கடி மாற்றி உண்ணுதல், உணவின்றி இருத்தல், அளவுக்கு மீறி உண்ணுதல், தொடர்ந்து சத்தற்ற உணவை உண்ணுதல், மிதமிஞ்சிய கொழுப்பு, புரதச்சத்துள்ள உணவுகளை உண்ணுதல், திடீரென மிகக் கடினமான வேலையைச் செய்தல், வேலை செய்யாது சோம்பி இருத்தல், தூக்கமின்மை, எந்நேரமும் தூங்கி வழிதல், நீண்ட பயணம், முறையற்ற காமம், ஓயாதகவலை மனமாறுபாடுகள் இப்படிப்பட்ட ஒழுங்கற்ற வாழ்க்கை பெரும்பாலான நோய்களுக்கு காரணமாக அமைகின்றது.

'எவன் ஒருவனுடைய உணவும் வேலை முறையும் உடற் பயிற்சியும் ஒழுங்காய் அமைக்கப்பட்டுள்ளனவோ, எவன் ஒருவனுடைய உழைப்பும் ஓய்வும் பொருந்துவனவாக உள்ளனவோ எவன் ஒருவனுடைய தூங்கும் நேரமும் உழைக்கும் நேரமும் முறைப்பட வரையறுக்கப்பட்டிருக்கின்றனவோ, அவனுக்கே இந்தஉலகில் சிறந்தபயன்கள் கைகூடும்' என்பது கீதையின் அறிவுரையாகும்.

இக்கீதை உபதேசத்தை மீண்டும் படித்துப் பாருங்கள் இந்த அரிய மொழிகளுக்கு ஏற்ப உணவு, உடற்பயிற்சி, உழைப்பு ஓய்வு; தூங்கும் நேரம், உழைக்கும் நேரம் ஆகிய

வற்றை சிறந்த வரையறைப்படுத்திக்கொண்டு, இன்பம் துய்ப்பதில் நன்நெறியைப் பின்பற்றி அமைதியாக மகிழ்வாக வாழலாம். 'நோய் வந்துவிட்டால் எந்தத் தவறால் வந்தது என்பதை அறிந்து உணவு, நடைமுறை முதலியவற்றை சரிசெய்து திருத்திக்கொள்ள வேண்டும்.

''நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

என்று திருக்குறள் விளக்குகிறது.

ஆங்கில வைத்திய முறை (அலோபதி) ஜெர்மன் வைத்தியமுறை (ஹோமியோபதி) இந்திய மருத்துவமுறை (ஆயுர்வேத வைத்தியம்) தமிழ் மருத்துவ முறை (சித்த வைத்தியம்) ஆகிய மருத்துவ முறைகள் நம் நாட்டில் உள்ளன. இன்னும் யுனானி வைத்திய முறையும் நாட்டு வைத்தியங்களும், பாட்டி வைத்தியங்களும் உள்ளன. இவை தவிர இயற்கை வைத்தியம் அல்லது காந்திய மருத்துவ முறையும் உள்ளது.

அதிகமாக ஆங்கில மருத்துவ முறையில் ஊசி மருந்து, மாத்திரைகள் ஏற்றுக்கொண்ட உடல்கெட்டு விடுகிறது. பலவீனமாகி விடுகிறது. இயற்கை வைத்திய முறையினால் கேடு எதுவும் விளைவதில்லை. ஆனால் அவ்வைத்திய முறைகள் நடைமுறையில் இல்லை. இயற்கை வைத்திய முறை என்பது மண், நீர், காற்று இவற்றாலேயே எல்லா நோய்களுக்கும் வைத்தியம் செய்வதாகும். எடுத்துக் காட்டாகச் சிலபார்க்கலாம்.

வயிற்றுவலி, வயிற்றுக்கடுப்பு, வெப்பம் இவற்றிற்கு மல்லாந்து படுத்துக் கொண்டு அடிவயிற்றை ஈரத்துணியால் போர்த்தி அதை மீண்டும் நீரால் நனைத்துக் கொண்டிருப்பது. நோய் கடுமையாக இருந்தால் கரம்பை மண்ணால் பற்றுப் போட்டு நனைத்து வருவது ஜலதோஷம், காய்ச்சல், இவற்றிற்கு நீராவி பிடித்தல், நெற்றியில் ஈரத்துணிப் பற்றுப் போடுதல், கண்வலிக்கு தலையில் கரம்பை மண் பற்றுப் போட்டு காய வைத்தல் — இவ்வைத்திய முறைகளால் உடனடியான நல்ல வெற்றி இருப்பதை மகாத்துமாகாந்தி பல சோதனைகள் மூலம் நிரூபித்துள்ளார். இவ்வைத்திய முறையை ஆறுஆண்டு

கள் என் நண்பர்களோடு பின்பற்றி வெற்றியைக் கண்டுள்ளேன். இயற்கை மருத்துவத்தை பின்பற்ற விரும்புவோர் இயற்கையை யொட்டி வாழவேண்டும். தினக்கடமைகளையும் வாழ்க்கையையும் முறைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆசனங்கள் செய்வதன் மூலம் பல நோய்களைக் குணப்படுத்திவிட முடியும். 'பிரணாயாமம்' செய்வதால் உடல்நலம் வளரும். இவற்றைப்பற்றி அடுத்தகட்டுரைகளில் காணலாம்.

நோய்கள் பற்றிய அறிகுறிகளை அறிந்த பலர் தங்களுக்கு அப்படிப்பட்ட நோய் அறிகுறிகள் இருப்பதாக கற்பனை செய்து கொண்டு டாக்டர்களிடம் வருவதாகச் சில டாக்டர்கள் என்னிடம் கூறியுள்ளார்கள். இது பெரும்பாலும் படித்தவர்களிடம்தான் அதிகமாக உள்ளது. இப்படிப்பட்டவர்களால் உளவியல் மருத்துவர்களுக்கு நல்ல கிராக்கி உள்ளது.

டாக்டர் பாவலோ என்ற அறிஞர் எண்ணங்களுக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பை முதலில் ஒரு நாய் மூலமாக ஆராய்ச்சி செய்தார். 'மணி அடிப்பது உடனே நாய்க்கு சோறிடுவது' இப்படிப் பல நாள் செய்து வந்தார். ஒருநாள் மணிமட்டும் அடித்தவுடன் நாயினுடைய நாக்கிலும் இரைப்பையிலும் ஜீரண நீர் சுரந்து வழிந்தோடியது. மேலும் மனிதனில் விரிவான ஆய்வு நடத்தினர். மனிதன் வெறுப்பும் சினமும் கொண்டுள்ளபொழுது சுரப்பிகளில் சுரக்கும் நீர்கள் விஷத் தன்மையானவையாகவும் விருப்பும் மகிழ்வும் உள்ள நேரங்களில் சுரக்கும் நீர்கள் அமுதமாகவும் இருப்பதை அறிந்து வெளியிட்டார். எனவே சினமாகவும் வெறுப்பாகவும் உண்டால் உண்ட உணவு உடலுக்கு நஞ்சாகவும்,விருப்போடும் மகிழ்வோடும் உண்டால் அது அமுதமாகவும் அமைகிறது. சங்கப் பாடலொன்றில் காதலி தன் கைப்படப் பிசைந்து செய்த மோர்க்கொழம்பு மிகஇனிமையாக உள்ளது. எனக் காதலன் கூறி உண்ட இனியக்காட்சி சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. அதைப்போல மகிழ்வோடு உணவை உண்ணவேண்டும்.

பொதுவாழ்வில் ஈடுபட்ட மகாத்துமா காந்தி 79 ஆண்டு களும், நேரு 78, படேல் 76, ஈ வே. ரா. 95, ராஜாஜி 95, காமராஜ்78 வயதும் வாழ்ந்துள்ளார்கள். இன்னும் மொரார்ஜி 86, ஜெயப்பிரகாஷ் 83, முன்னுள் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி, தற்போதைய குடியரசுத் தலைவர் ஆகியோர் 80 வயதைத் யும் தாண்டியும், மகாவித்துவான் மே. வீ. வேணுகோபால் பிள்ளை 87 வயதிலும் இளைஞர்கள்போல செயல்படுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? தங்கள் உடலைப் பற்றியோ தம் இன்ப துன்பங்களைப் பற்றியோ தங்கள் குடும்பங்களைப் பற்றியோ நினைக்காது பிறர்நலனையே எண்ணிப் போராடி வாழ்ந்ததுதான். இதை மகாவித்துவான் 30—12—75-ல் சென்னையில் நடைபெற்ற தமிழ் கவிஞர்கள் மாநாட்டில் குறிப்பிட்டார். எல்லோரும் தங்களைப்பற்றியே நினைத்துக் குமையாது மற்றவர்களைப் பற்றியும் எண்ணி நிறைவான வாழ்க்கை வாழ வேண்டும்.

பெர்னுட்ஷா மருத்துவர்களைக் கேலி செய்து ஒருமுறை கீழ்க்கண்டவாறு கூறினர். 'நோயாளியாக அரசினர் மருத்துவ மனைக்குச் சென்றால் பாதிக் குணமானவுடன் பாதி உயிரோடு வெளியே தள்ளிவிடுவார்கள். தனியார் மருத்துவ மனைக்குச் சென்றால் பிணமாகத்தான் வெளியே அனுப்புவார்கள். அதுவரைக்கும் விடமாட்டார்கள்'.

டாக்டர்களையே சார்ந்து வாழ்வது நல்லதல்ல. அது வாழ்க்கையில் உடலையும் உள்ளத்தையும் பலவீனப்படுத்தி விடும். ஆனால் ரகசிய நோய்களையோ, உண்மையான நோய்களையோ அஞ்சி மறைக்காமல் டாக்டர்களிடம் காட்டி சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

'தூய்மை, உணவு, பயிற்சி'— இவற்றில் வரும் கேடுகள் உடனடியாக வயிற்றையே பாதிக்கிறது. எல்லாக் காய்ச்சலும், பல்வேறு நோய்களும் வயிற்றில் ஏற்படும் கோளாறுகளாலேயே ஏற்படுகின்றன. எனவே திருவள்ளுவர் கூட 'மருந்து' என்ற அதிகாரத்தில் பத்துக் குறட்பாக்களில் ஆறு குறட்பாக்களில் வயிறு, செறித்தல்பற்றியேகுறிப்பிட்டுள்ளார்.

நாவின் சுவை, மற்றவர்கள் வேண்டுகிறார்கள் என்று உண்ணாது செறித்ததை அறிந்து பசிக்குத் தேவையான அளவு உண்டால் மருந்து என்பதே தேவையில்லை என்று வள்ளுவர் கூறுகிறார்.

''மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்''

103 ஆண்டுகள் வாழ்ந்த பொறியியல் அறிஞர் விஸ்வேஸ்வரய்யாவும், 96 ஆண்டுகள் வாழ்ந்த அறிஞர் பெர்னாட்ஷாவும் இன்னும் நீண்ட ஆயுள் வாழ்ந்த முதியவர்களும் குறிப்பிட்ட காலத்தில் அடிக்கடி மாறாத ஒரேமாதிரியான உணவை உண்டு வந்ததும், தினமும் தவறாது திறந்த வெளியில் உலவி (Walking) வந்ததையும் தங்கள் நீண்ட ஆயுளுக்குக் காரணமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். வள்ளுவப் பெருந்தகை கூட

''மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு''

என்று கூறியுள்ளார்.

பொதுவாக உடல் நலனையும் உலக நலனையும் கருத்தில் கொண்டு உணவை அமைத்துக்கொள்ளுவதே சிறந்த மனிதத் தன்மைக்கு அழகாகும். மூன்றுவேளைகளுக்கும் அரிசி உணவு என்பது உடல் நலனுக்கும் உலக நலனுக்கும் பொருந்தாது. காலை உணவு — கோதுமை (பூரி, சப்பாத்தி, உப்புமா) மதியம் — கம்பு, சோளம், கேழ்வரகு, இரவு — அரிசி (இட்லி, தோசை சோறு) என்று அமைத்துக் கொள்ளுவது நல்லது. கம்பு, சோளம், கோதுமையை ஏழைகளே உண்ணவேண்டும் என்று நிர்ப்பந்திக்காது அனைவரும் பங்கேற்பதே நல்லது.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' 'சுவரை வைத்தே சித்திரம்' என்பன உயர்ந்த பழமொழிகள் அமைதியான இன்பமான உயர்ந்த வாழ்க்கை வாழ முற்படுவோர் உடலைப் பேணிக் காக்க வேண்டும்.

''உடம்பால் அழியின் உயிரால் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# அலங்கார நாயகன் 22

திருமதி ஆர். பார்வதிஅம்மாள் அவர்கள்,
தமிழாசிரியை, நாமக்கல்.

---

## எல்லாம் மறந்த நிலை

காதலும் வீரமும் இரண்டு கண்களைப் போலத் தமிழர்களால் போற்றப்படுபவை. பெண் என்றால் காதலும், ஆண் என்றால் வீரமும் நினைவுக்கு வருகின்றன. பெண்ணின் இயல்பு காதலை உண்டாக்குதல் அதனால் ''மாதர் காதல்'' என்று தொல்காப்பியம் கூறுகிறது. மாதர் என்ற சொல்லுக்கே காதல் என்று பொருள், பெண்ணின் தன்மை வெட்பு.அதற்கு விருப்பம் என்று பொருள்,

இப்படியே ஆணின் தன்மை ஆண்மையாகும், ஆண்மை என்ற சொல்லுக்கே வீரம் என்பது பொருள். ஆடவனது இயல்புகளுள் வீரம் தலை சிறந்தது என்பர். பெண்ணால் காதலும் ஆணால் வீரமும் வளர்கின்றன. பெண்ணின் காதலை ஆணின் வீரம் பாதுகாக்கிறது. வீரமும், காதலும் வாழ்க்கையை அரண் செய்து இன்பத்தை ஊட்டுகின்றன.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேனே உயிரை வளர்த்தேனே''

என்று திருமூலர் கூறியிருப்பது சிறந்த மந்திரமாகும். உடம்பால் கெட்டவர் சிந்தனை திடமானதாக இருக்காது. நீண்டநாள் வாழ முடியாது.

உயர்ந்த வாழ்க்கை அமைத்துக் கொள்ள உடல் பற்றிய அறிவு இயற்கை வைத்தியம், பிறமருத்துவ முறைகள் பற்றிய அறிவு பெற்றுக்கொள்ளவேண்டும். இது பற்றிய நூல்களைக் கற்க வேண்டும். நன்கு வாழ நாட்டுக்குச் சேவை செய்ய இருக்கிறாள், கீதையில் கூறியுள்ளபடி உடம்பை நோயின்றிப் பேணிக்காக்கவேண்டும் சான்றோர்கள் வாழ்ந்தமுறையில் தங்கள் வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக் கொள்ளவேண்டும்.

முருகன் வீரத்தைப் பாதுகாக்கும் தெய்வம் அவன்தேவர் படைத் தலைவன். போர் பல செய்து வெற்றி பெற்றவன். அவன் திருக்கரத்தில் உள்ள வேல் அவன் வீரச் சிறப்புக்கு அடையாளமாக இயங்குகிறது. படைகளுக்குள் வில், வாள் வேல் என்பவை சிறந்தவை அவற்றிலும் வேல் மிகச்சிறந்தது. அதனைக் கைக் கொண்ட முருகன் பெரிய வீரன். ''பெருந் திறல் மன்ன'' என்று திருமுருகாற்றுப்படை அவனைப் போற்றுகிறது.

வீரத்தில் சிறந்து நிற்பதைப் போலவே முருகன் காதலிலும் சிறந்து நிற்கிருன். காதலைப் பாதுகாக்கும் தெய்வம் அவன் வள்ளி யெம்பெருமாட்டியிடம் காதல் சிறந்து நின்றபேரழகன் அவன் வீரமும், காதலும் சிறந்த முருகனை ''மங்கையர் கணவ, மைந்தர் ஏறே'' என்று நக்கீரர் பாராட்டுகிருர். காதல்சிறப்பை அவன் அணிந்த மாலை காட்டுகிறது அவன் வெவ்வேறு வகையான மாலைகளை அணிவதுண்டு. அவனுக்கு அடையாளமாலை காந்தள், அவனுடைய காதலுக்கு அடையாளமாக இருக்கும் மாலை கடம்பு. அதைப் போகத்திற்கு உரிய மாலை என்று நச்சினர்க்கினியர் சொல்லுவர் முருகக் கடவுளுக்கு கடம்ப மலர் மிகவும் உகந்தது. அதனாலேயே கடம்பன் என்ற திருநாமமும் பெருமானுக்கு வழங்குகிறது. ''பூக்கும் கடம்பா முருகா கதிர் வேலா'' நக்கீரர்.

''கடிமாமலர்க்கு ளின்பமுளவேரி கக்குநண்பு
தருமா கடப்பமைந்த.........தொடைமாலை
கனமேரு வொத்திடும்ப னிருமா புயத்தணிந்த
கருணாகர பிரசண்ட............கதிர்வேலா''
''பரிமள மிஞ்ச கடம்பமாலையு மணிவோனே'' –திருப்புகழ்

முருகப் பெருமானது வீரப் பெருமையை அவனது திருக்கரத்திலுள்ள வேலும் காதற் பெருமையை அவன் திருமார்பில் அணிந்த கடம்ப மாலையும் புலப்படுத்துகின்றன. அந்த இரண்டையும் ஒருசேர நினைக்கிருர் அருணகிரிநாதர்.

''சொன்ன க்ரவுஞ்ச கிரிஊ
டுருவத் தொளைத்த வைவேல்
மன்ன! கடம்பின் மலர்மாலை மார்ப''

முதலில் வேலைப்பற்றிச் சொல்கிறார். அது க்ரௌஞ்ச மலையைத் துளைத்து, அது சொர்ண மயமானது என்றுசொல்கிறார்.

"கனகக் கிரியைப் பொரும் வேலா" – திருப்புகழ்.
"குருத பெயர் பெற்று கனவட சிகரி" – வகுப்பு.
"பொன்னம் சிலம்பு புலம்பவரும் எங்கோன்" – அலங்காரம்.

இறுகிய பொன்னாக நின்ற க்ரௌஞ்சத்தில் ஊடுருவிச்சென்று முருகனுடைய வேல் தொளைத்தது அவன் திருமார்பில் அணியும் மாலை குறிஞ்சி நிலத்திலே மலரும் கடம்பு. முருகன்தேவிமாரோடு உல்லசமாக இருக்கும் போது அணிகிற மாலை அது.

"அலங்கலென வெண்கடம்பு
புனைந்து புணரும் குறிஞ்சி
அணங்கை மணம்முன் புணர்ந்த.........பெருமாளே"

எனத் திருப்புகழில் வருகிறது. கடம்பு மாலையை அணிந்து வள்ளியெம் பெருமாட்டியோடு இன்புற்ற முருகனை வீரத்திற்கும், காதலுக்கும்நாயகனாக, வைவேல் மன்னனாக, கடம்பணியும் மார்பனாக ஏத்துகிறார் அருணகிரியார்.

அருணகிரியார் முருகனுடைய திருவருளில் திளைத்து இன்ப அனுபவம் பெற்றவர். இறைவனை வழிபட்டு அன்பு முறுக முறுகப் பலவகையான அநுபவங்கள் உண்டாகும். அநுபவத்தில் பல நிலைகள் உண்டு, இறைவன் திருநாமத்தைச் சொன்னால் நாக்கு இனிக்கும் என்று பக்தர்கள் சொல்கிறார்கள். அந்த அநுபவம் நமக்கு தெரியாது. இறைவனை நினைத்தால் மனம் இனிக்கும் என்கிறார்கள். அது மற்றோர் அநுபவம்

"பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்து ஞுணர்ந்தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டி அணைத்தாலும்
இத்தனைக்கும் தித்திக்கும் இனித்த சுவைக் கரும்பே"

என்று இராமலிங்க சுவாமிகள் பாடுகிறார். அது ஓர் தனி அநுபவம்

அருணகிரிநாதர் பெற்ற அநுபவ வகைகளில் ஒன்றை இப்போது சொல்கிறார் அதை அருளிய வைவேல் மன்னனை,

கடம்ப மலர்மாலை அணிந்த மார்பனைப் பார்த்துச் சொல்கிறார் அந்த அநுபவம் அவருக்கு வியப்பை மூட்டுகிறது

"இறந்தே விட்டது இவ்வுடம்பே"

அந்த நிலை எப்படி வந்தது என்பதை அவர் சொல்கிறார். உடம்பு உணர்ச்சியற்றுப் போவதற்கு முன்பு படிப்படியாக சில முயற்சிகள் செய்தார். அவற்றின் விளைவே இந்த அநுபவம், முருகனை எப்போதும் பாடினார் பின்பு மௌன முற்றார், தியானித்தார். மனதால் நினைத்தார், முருகனுடைய நினைவில் அழுத்தமும் ஒருமைப் பாடும் ஏறியவுடனே மற்ற நினைப்புகள் தாமே ஒழிந்தன, அந்த நினைவில் ஒன்றிய போது முருகனுடைய நினைவு மாத்திரம் இல்லாமல் முருகனுடைய உணர்வே எழுந்தது.

"நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து"

என்பது திருவருட்பா, "மோன மென்பது ஞான வரம்பு" ஞானத்திற்கு எல்லையாக இருப்பது மௌனம். பேசா அனுபூதி பிறந்தவர்க்கே பெரும் சுகம் கிடைக்கும். எல்லாவிதமான சாதனங்களும் முடிவில் மௌனத்தையே அடைகின்றன "கண்மூடி மௌனியாகத் தனியே இருப்பதற் கெண்ணினேன்" என்கிறார் தாயுமான சுவாமிகள்.

அருணகிரிநாதருக்கு ஆறுமுகப் பெருமான் தாமே குரு மூர்த்தியாக எழுந்தருளி வந்து மௌன உபதேசம் புரிந்தனர்.

"அருணை நகர்மிசை கருணையோடருளிய
பரமஒரு வசனமும் இருசரணமு மறவேனே" - திருப்புகழ்.

இந்த மௌன நிலை எளிதில் கிடைப்பதன்று, பல காலம் செய்த சிவபூசையாலும், ஆலய வழிபாட்டாலும், சித்த சுத்தியாலுமே கிடைப்பது அதனை ஆண்டவனிடம் யாசித்துப் பெறுவது எளிய வழியாம். அருணகிரிநாதர் ஆறுமுக வள்ளலிடம் விண்ணப்பித்தார்.

"சலில முடியன சனனமு மலமலம்
இனியு னடியரோ டொரு வழிபடஇரு
தமர பரிபுர சரணமு மவுனமு மருள்வாயே" - திருப்புகழ்.

பரம பதியாகிய குமரக் கடவுளை மெய்யறிவினால் உணர்தல்,

"கந்தனை யறிந்தறிந் தறிவினில்
சென்று செறுகுந் தடந் தெளிதற" – திருப்புகழ்.

"உரையவிழ உணர்வவிழ உழமவிழ உயிரவிழ
உளபடியை உணருமவ ரனுபூதி யானதுவும்" – வகுப்பு

மௌனத்தை உற்று என்றது வாய் பேசுவது ஒழிந்த நிலை. நிர்க்குணம் பூண்டு என்றது. மனம் சிந்தித்தலை ஒழிந்த நிலை, இறந்தே விட்டது இவ்வுடம்பே என்றது உடம்பு உணர்ச்சியை மறந்தநிலை இவை முறையே வாங்மௌனம் மானோ மௌனம், காஷ்ட மௌனம் எனப் பெறும். வாயால் பேசுவது நின்று, மனத்தால் சிந்திப்பதும் நின்றால் உடம்பு தானே உணர்விழந்து விடும் நான் என்ற உணர்வும் அற்றுப் போகும், இதையே சமாதிநிலை என்று கூறுவர் பெரியோர்.

"உல்லாச நிராகுல யோகஇதச்
சல்லாப விநோதனும் நீயலையோ?
எல்லாம் அறஎன்னை இழந்த நலம்
சொல்லாய் முருகா சுரபூபதியே"

என்ற அநுபூதிப் பாட்டில் என்னை இழந்த நலம் என்றுகுறிப்பதும் இந்த நிலைதான்,

ஜீவபோதம் கழன்ற இடம் சிவோகம் பாவனையால் ஜீவன் தன்னை மறந்து சிவத்தை நினைந்து நிற்கும்.

"யானாகிய என்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலைநின்றது தற்பரமே" – அநுபூதி.

"யான்வேறு என்உடல் வேறு,
செகத்தி யாவும் வேறாக நிகழ்ச்சியா மனோதீத
சிவசொரூப் மாயோகியென ஆள்வாய்" – திருப்புகழ்.

"சொன்ன க்ரவுஞ்ச கிரினை
யுருவத் தொளைத்த வைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை
மார்பாமௌ னத்தை உற்று
நின்னை உணர்ந்து உணர்ந்து எல்லாம்
ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு
என்னை மறந்திருந் தேன் இறந்
தேவிட்டது இவ்வுடம்பே"

(தொடரும்)

325

# ஆறுபடையுள் ஆறுமுகன்

திரு. வண்ணை: ஆ. ஜானகிராமன் அவர்கள்

ஆண்டிகோலம் பூண்டதுவும் ஏனோ? - கனி
வேண்டி ஞாலம் சுற்றியது வீணோ! - தமிழ்ப்
பழுத்த மறைகனியே
பழநீ மலைநின்ற
பாலா — சக்தி — வேலா!

வாணியனை கொட்டிசிறை யிட்டு - மறை
வேணியனை முட்டியிடப் பட்டு - நல்ல
சூட்சமத்தின் பொருளுரைத்த
சுவாமி மலையமர்ந்த
வேதா — குரு — நாதா!

அருந்தவத்தோர் பழிசுமந்த சூரன் - அவனின்
பெரும் இனத்தை அழித்தெழுந்த வீரன் - அயில்
செந்தூரலையோடு
வந்தே விளையாடும்
வேலா — சிவ — பாலா!

கானகத்துக் குறமகளைக் கண்டு - அருள்
ஞானவேலன் மயக்கமிகக் கொண்டு - விரும்பி
அருங்காதல் தவம்புரிந்து
திருத்தணிகை மலைவாழும்
முருகா — மாயோன் — மருகா!

தேவமகள் மணமாலை சூட - வாழ்த்தி
மூவருமை திருவாணி பாட - போற்றும்
திருப்பரங் குன்றினில்
திருமணம் முடித்திட்ட
குகா — ஆறு — முகா!

மெய்யார் உள்ளன்பு மாட்சி - பெற
தெய்வானை வள்ளியோடு காட்சி - தரும்
பழமுதிர் சோலை
வழங்கு மருள்தேனே
அருளே — சுருதி — பொருளே!

முற்றும்

32க

# "மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம் உரை விளக்கம்"

" செந்தமிழ்ச் செல்வன் "
**புலவர் திரு. சிக்கல். சி. சானகிராமன் அவர்கள்,**
தெற்கு வீதி சிக்கல் (அஞ்சல்) நாகை (வட்டம்)

## முன்னுரை

சிவபுராணம் என்பது, செந்தமிழ் மொழியில் உள்ள திருவாசகம் என்னும் தெய்வத் திருவருள் நூலின், முதற்கண் அமைந்துள்ள திருப்பதிகம் ஆகும். திருப்பெருந்துறையில், குருந்தமரநிழலில், இறைவனே குருவடிவாக வந்து, திருவைந்தெழுத்து உபதேசம் செய்யப் பெற்ற மாணிக்கவாசகர், அத்திருவைந்தெழுத்தையே தொடக்கமாக அமைத்துப் பாடியருளிய சிறப்புமிக்கது,சிவபுராணம் என்னும் திருப்பதிகம். இப்பதிகத்திற்கு இப்பெயரை அமைத்தருளியவர் மாணிக்கவாசகரே என்பதை ''சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்'' எனவரும் அகச்சான்று கொண்டு அறியலாம். திருவாசகம் ஆகிய செந்தமிழ்மாமறைக்குத் திருமுகமாகிய பிரணவம் போல அமைந்து திகழ்வது சிவபுராணம் எனலாம்.

எளிமையும் இனிமையும் ஒலி நயமும் உடையதாகத் திகழும் சிவபுராணமானது, ஓதுபவர் எவராயினும் அவர் அனைவர் தம் கல்நெஞ்சத்தையும் கரைத்து உருக்க வல்லது. பொருள்பொதிந்த சிறந்த சிறுசிறு தொடர்களால், இப்பதிகம் அழகுற இனிதமைந்துள்ளது. ஆதலின் இளஞ்சிறுர் முதல் பெருஞ் சான்றோர் வரையில், அனைவரும் இதனை உவந்தோதி மகிழ்வர். சிவஞான போதம் என்னும் சிறந்த பெருந் தத்துவத் தமிழ் நூலுக்குப் பேருரை வகுத்தருளிய ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள் தாம் இயற்றிய சிவஞானப் போதப் பேருரையின் தொடக்கத்தில், சிவபுராண முதல் இருபது வரிகளை மிகவும் சிறப்பும்பொருத்தமும் அமையக் கடவுள் வாழ்த்

தாகவும், அவையடக்கம் போலவும், மிக்கபக்தியுடன் பெயர்த்தெடுத்து எழுதிப் போற்றியுள்ளார். திருவாசகத்தின் சிறப்பையும், சிவபுராணத் திருப்பதிகத்தின் சிறப்பையும், நம்போன்றவர்கள் அறிந்து கொள்வதற்கு இஃதொரு நல்லசான்று.

இத்தகைய சிவபுராணத் திருப்பதிகம், கலிவெண்பாவால் அமைந்ததாகும். இக்கலிவெண்பாப் பாடல், ஒரே செய்யுள் ஆயினும், இதனையும் பதிகம் என்று வழங்குவர் சான்றோர். இது 95 வரிகள்கொண்ட ஒருசிறிய செய்யுள் ஆயினும் இஃது ஒரு நூலின்கண் அமைந்திருத்தற்குரிய பலவகைக் கூறுகளையும் கொண்டதாக விளங்குகின்றது. ஒரு சிறந்த நூலின் தொடக்கத்தில் வாழ்த்து–வணக்கம்–வருபொருள் உரைத்தல் என்னும் மூன்றுகூறுகள் அமைந்து காணப்படும். அம்முறையில் இதன் முதல் ஐந்து வரிகள், இறைவனின் திருவடிகள் வாழ்க! வாழ்க! எனக் கூறுகின்றன. வெற்றித் திறம் பற்றிக் கூறுதலும் ஒருவகை வாழ்த்தே ஆதலின், அடுத்து வரும் ஐந்து வரிகள் வெல்க,வெல்க எனத் துதித்தலாக வந்து வணக்கம் என்னும் கூற்றில் அமைகின்றன. அவனருளாலே அவன் தாள் வணங்கிச் சிவபுராணம் தன்னை உரைப்பன்' என்னும் பகுதி வருபொருள் உரைத்தல் என்னும் கூறாக அமையும். இவ்வாற்றால் வாழ்த்து - வணக்கம் – வருபொருள் உரைத்தல் என்னும் மூன்று கூறும் கொண்ட மங்கல வாழ்த்து என்பதனைச் சிவபுராணம் பெற்றிருத்தல் அறிந்து மகிழத்தக்கது. இம் மங்கல வாழ்த்தின் பின் கூறப்படுதவற்குரிய அவையடக்கம் என்னும்பகுதியும் சிவபுராணத்தில் அமைந்திருக்கக் காண்கின்றோம்! ''கண்ணுதலான் தன் கருணை'' என்பது முதல் 'நின் பெருஞ்சீர் பொல்லாவினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்'' என்பது அவையடக்கப் பகுதியாகும். இதன் பின்வரும் வரிகளில் உயிர்களின் பிறவி வேறுபாடுகள், இறைவன் ஆட்கொண்டருளிய தன்மை,இறைவனின் சிறப்பியல்புகள் முதலியன பலவும் விளக்கப் பெற்றுள்ளன. இறுதிக்கண் நூற்பயனும் நுவுலப்பெற்றதாயிற்று. இவை அனைத்தையும் நுண்ணிதின் எண்ணி உணருங்கால், சிவபுராணம் என்னும் இத்திருப் பதிகமானது எத்துணை மாட்சிமை உடையது என்பது தெற்

றெனப் புலனாகும். சிறந்த இப்பதிகத்தினை நாம் அனைவரும் அன்புடன்நாடோறும்ஓதி, நலம்பெற்றுஉய்யமுயலுவோமாக!

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
## சிவபுராணம் உரைவிளக்கம்.

1—10 நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகி நின்ற அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!

**உரை விளக்கம்:** நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்து மந்திரம் வாழ்க! எல்லாவற்றிற்கும் தலைவனாக விளங்குபவனின் திருவடிகள் வாழ்க! கண்ணிமை ஒருகாற் பொருந்தும் ஒரு சிறு நேரமும், என் நெஞ்சினின்றும் அகலாதவனுடைய திருவடிகள் வாழ்க! திருப்பெருந்துறையில் எழுந்தருளி எளியேனை ஆட்கொண்டருளி குருநாதனான மாணிக்க மணியின் திருவடிகள் வாழ்க! ஆகமங்களின் பொருளாக விளங்கி, அணுகி அருள் புரிபவனது திருவடிகள் வாழ்க! ஒருவனாக இருந்தே! பல உருவங்களை உடையவனாய் எப்பொருளினும் தங்குபவனது திருவடிகள் வாழ்க! எளியேனது மனவோட்டத்தைப் போக்கி என்னை அடிமை கொண்ட பேரரசனின் திருவடி வெற்றியுறுக! பிறவி ஆகியமரத்தை வேருடன் அறுக்கும் தலைக்கோலம் உடைய பெருமானின் கழல் அணிந்த திருவடிகள் வெற்றியுறுக! அன்பில்லாத புற நெறியினர்க்கு எட்டாத தொலைவில் இருப்பவனின் பூப்போன்ற மெல்லிய அழகிய திருவடிகள் வெற்றியுறுக! கைகூப்பி வணங்கும் அன்பர்கள், அகத்தே நினைந்து மகிழ்தற்கு உரிய தலைவனின் திருவடிகள் வெற்றியுறுக! தலைமேற் கைகூப்பும் அன்பரை உயரும்படி செய்யும் சிறப்புடையவனின் திருவடிகள் மேம்படுக!

11—20 ஈசன் அடி போற்றி! எந்தை அடி போற்றி!
தேசன் அடி போற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி!
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி!
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி!
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

**உரை விளக்கம்:** எப்பொருளையும் ஆள்வோன் திருவடிக்கு வணக்கம். எம் தந்தையின் திருவடிக்கு வணக்கம் ஒளி வடிவினன் திருவடிக்கு வணக்கம். சிவபெருமானின் சிவந்த திருவடிக்கு வணக்கம். அன்பர்களின் அன்பில் விளங்கி நிற்கும் குற்றமற்றவனது திருவடிக்கு வணக்கம். வஞ்சகம் மிக்க பிறப்புத் துன்பங்களை வேருடன் அறுக்கும் அரசனது திருவடிக்கு வணக்கம். சிறப்பு மிகுந்த திருப்பெருந்துறையில் தோன்றி, எளிவந்த நம்முடைய தேவனின் திருவடிக்கு வணக்கம். நுகர்ந்து நிரம்பாத பேரின்பத்தை அளித்தருளும் மலை போன்றவனுக்கு வணக்கம். சிவபெருமானாகிய அவன், என் நினைவின் உள்ளே நிலைபெற இருந்த அத்தன்மையினால், அவனது திருவருளாலே, அவனுடைய திருவடிகளை வணங்கி, உள்ளம் மகிழும்படி சிவபுராணம் என்னும் இக்கலிவெண்பாவினை, முற்பிறவிகளில் செய்த தீவினைகள் முற்றும் நீங்கி ஒழியும்படி, யான் சொல்ல முற்படுகின்றேன்.

21—31 கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில்ஆர் கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்!
புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம் ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்,

உரை விளக்கம்: நெற்றியிலே கண்ணை உடைய இறைவன், தன் அருட்பார்வையைக் காட்டும் பொருட்டு அவனது திருமுன்பு சென்று அடைந்து, நினைவிற்கும் எட்டாத அழகு நிறைந்த திருவடிகளை வணங்கி, வானுலகில் நிறைந்து, மண்ணுலகில் நிறைந்து, இவற்றிற்கும் மேம்பட்டு அப்பாலாய் நிறைந்தவனே! விளக்கம்மிகுந்த ஒளி வடிவினனே! எண்ணிக்கையின் அளவினையும் கடந்து, முடிவு இல்லாமல் விரிந்து நிற்பவனே! நினது பெரும் சிறப்பைத், தீவினையை உடையயான், புகழ்ந்து கூறும் முறை ஒன்றனையும் அறியாதவனுய் இருக்கிறேன். புல்லாகியும், பலவகைப் பூண்டுகளாகியும், பலதிற மரங்களாகியும், பற்பல விலங்குகளாகியும், பலவகைப்பறவைகளாகியும், பாம்புகளாகியும், கற்பாறைகளின் உள்ளாகியும், மனிதர்களாகியும், பூதக் கூட்டங்களாகியும், வலிய அரக்கர்களாகியும், முனிவர்களாகியும், தேவர்கள் ஆகியும், தோற்றுவிக்கப்பட்டு இருந்து வருகின்ற அசையாப் பொருளும், அசையும் பொருளும் ஆகிய இவைகளினுள்ளே, யான் எல்லாப் பிறவிகளிலும் பிறந்து இளைப்படைந்தேன்.

[தொடரும்]

# யாரெனக்கு உறவு

செல்வி: த. பத்மாவதி அவர்கள்,
மதுரை ஆதீன சிஷ்யை,
54, ஜடாமுனி கோவில் மேலச்சந்து, மதுரை.

உறவினரெனினும், சுற்றத்தினரெனினும் ஒக்கும் உறவினருடைய தன்மையையும், அவசியத்தையும் வலியுறுத்தி வள்ளுவர் சுற்றந்தழால் என்ற அதிகாரத்தை அமைத்துள்ளார். ஒருவன் செல்வத்தை இழந்து வறியவன் ஆனபோதும் என்றும்போல் அன்புபாராட்டி பழைய தொடர்பினைக்கொண்டாடும் தன்மைகள் சுற்றத்தாரிடத்திலேயே உள்ளன என்பதை வள்ளுவர்,

''பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள''

என்று வலியுறுத்துகிறார் அதே வள்ளுவர் அடுத்த குறளில்,

''விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும்''

அன்பு நிறைந்த சுற்றத்தார் ஒருவனுக்குக் கிடைக்குமானால், அது அவனுக்கு எல்லா ஆக்கமும்தரும் என்று அதன் அருமையையும் குறிப்பிடுகின்றார். உண்மையிலேயே அன்பு நிறைந்த சுற்றத்தார் ஒருவனுக்குக் கிடைத்தல் அரிதினும் அரிய காரியமாகும். பொதுவாக அமையும் சுற்றத்தின் தன்மையைப் பற்றி ஔவைப் பிராட்டியார்,

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் — அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டியுறுவா ருறவு.

என்று அருளியிருக்கின்றார்.

துன்பம் வந்த காலத்திலேதான் உறவினர் முதலியோருடைய அன்பைத் திட்டமாக அளந்தறியக் கூடும். நமக்கு வரும் துன்பங்களே உறவினரது அன்பை அளக்கும் அளவு

கோலாகும். ஆதலால் அக்கேட்டிலும் ஒரு பயன் உண்டு என்கிருர் பொய்யில் புலவர் திருவள்ளுவர்,

> **கேட்டிலும் உண்டோ ருறுதி கிளைஞரை**
> **நீட்டி யளப்பதோர் கோல்.**

என்று கூறுகின்ருர்.

எனவே உறவும் வேண்டும், அவ்வுறவு என்னுடைய எல்லா இன்பத் துன்பங்களிலும் ஊடுருவி உதவவும் வேண்டும். அப்படிப்பட்ட உறவு எனக்கு வேறு யாரும் இல்லை என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாவடுதுறையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைக் குறிப்பிட்டுத் தனது தேவாரத்தில் கூறுகிருர். அத் தேவாரம் வருமாறு,

> **வானநாடனேவழித்துணை மருந்தேமாசிலாமணியே மறைப்பொருளே**
> **ஏனமா வெயிருமையும் எலும்பும் ஈடுதாங்கிய மார்புடையானே**
> **தேனெய்ப் பால்தயிர் ஆட்டுகந்தானே தேவனே திருஆவடுதுறையுள்**
> **ஆனையே எனை அஞ்சலென்றருளாய் ஆரெனக்குறவு அமரர்கள் ஏறே.**

வானுலகில் உறையும் சிவபெருமானை வான நாடனே என்று குறிப்பிடுகின்ருர். இவ்வுலகத்தில் எல்லாப் பொருளையும், பூத உடலையும் உதறிவிட்டுக் களையா உடலோடு விண்ணுலகு செல்லும்பொழுது வழித்துணை மருந்தாக, உடன் வருவதற்கு வல்லமை வாய்ந்த உறவினர் சிவபெருமான் ஒருவரே ஆவார் என்று அறிந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவரைத் தனக்குத் தோழமையாகத்தரப்பெற்றதில்வியப்பொன்றுமில்லையல்லவா? அவரை மாசிலா மணியே, மறைப் பொருளே என்று புகழ்ந்ததிலும் வியப்பில்லையல்லவா? அப்பெருமான் என்ன அணிந்திருக்கிருர் என்று அடுத்த வரியில் கூறுகிருர். பயந்த தனி வழிக்குத் தனித்துணையாக வரும் பெருமான் வலியவராகத் தானே இருக்க வேண்டும். ஆதலால்தான் ஆமையையும், எலும்பையும் மார்பிலே ஈடுதாங்கியவராய் இருக்கிருர் என்று நேரில் கண்டு சொல்கிருர். அவருக்கு எது விருப்பம் என்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிருர். தேன், நெய், பால் தயிர் இவற்றை அபிஷேகப் பொருளாக உவந்து ஏற்றுக் கொள்கிருர் எம்பெருமான் என்கிருர். இறைவனிடத்திலே அவர் நேரிலே பேசி 'ஆனையே எனை அஞ்சலென்றருளாய்,

உன்னைத் தவிர வேறு யார் எனக்கு உறவு'' என்று உரிமையுடன் கேட்கிறார்.

அநேகர்கோவிலில்உள்ள மூர்த்தங்களுக்கு வடிவுகொடுத்தவன் மனிதனே என்றும், மனிதனுடைய கற்பனைத் திறத்தினாலேயே கடவுள் வடிவம் ஏற்படுத்தப் பெற்றதென்றும் தவறாகக் கருதியும்,சொல்லியும் எழுதியும் வருகிறார்கள். அப்படி இவ்வுலகில் உள்ள மனிதர்கள் இங்குள்ள மூர்த்தங்களுக்கு வடிவு கொடுத்திருந்தால், இதே வடிவுள்ள மூர்த்திகள் விண்ணுலகில் இருக்க முடியாதல்லவா? அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு அரிய பெரிய உண்மை தெரியாது. 1918 வது வருஷம் **Herold Bayley** ''ஹெரால்டு பெய்லி'' என்பவர் லண்டன் மாநகரைச்சேர்ந்தவர். **The Undiscovered Country**(கண்டுபிடியாத பிரதேசம்) மரணத்தையும், மரணத்திற்குப் பின்னுள்ள உலகத்தையும்அறிவிக்கிற ஆவிஉலகஅறிவிப்புக்களின் தொகுப்பு என்ற புத்தகத்தில் கொடுத்துள்ள பகுதியின் தமிழாக்கமாவது: (இறந்து ஆவிஉலகத்தில் இருக்கிற ஒருவர் பூவுலகில் உள்ளவர்களுக்குச் சொல்லியிருப்பதன் சுருக்கமாவது)

''இவ்வுலகில் இந்துக்கள் கோவில்களில் வழிபடுகின்ற மூர்த்திகள் எல்லாம் மேலுலகில் விண்ணுலகில் இருக்கிறார்கள். ஆச்சரியப்பட்டு என்ன என்று திரும்பவும் கேட்கிறீர்கள். பூவுலகிலுள்ள மனிதன் தன்னுடைய கற்பனையினால், கடவுள்களின் உருவங்களைக் கற்பனையினால், கடவுள்களின் உருவங்களை உண்டாக்கியிருந்தால் அவ்வுருவங்கள் கண்ணுக்குக் தெரியாத மேலுலகங்களில் இருக்கும் தன்மையையும் அவனால் ஏற்படுத்த முடியுமா? முடியாதல்லவா? அவ்வடிவினர் முதலில் இங்கு (மேலுலகத்தில்) இருந்தவர்களே மனிதன் வெகுகாலத்திற்கு முன்பே தன்னுடைய சொந்தமானதக் காட்சியினாலும் ஆவி உலகத் தொடர்பினாலும் அவர்களை அறிந்திருந்தான். மனிதன் அவர்களின் உருவங்களை உண்டாக்கவோ, சிருஷ்டிக்கவோ இல்லை மனிதனே சிருஷ்டித்திருக்கிறான் என்று சொல்லுகின்ற சில உலகத்தவர் வாழ்வின் சட்ட திட்டங்களை அறியாதவராவார். மனிதன் அதிலும்

பண்டைக்காலத்து மனிதனே, தன்னுடைய ஆவி உலகத்த ரோடு கொண்ட உறவினுலும் நெருங்கிய தொடர்பினுலு அவற்றைத் தெரிந்து கொண்டான்.

இந்தக் கடவுள் அந்தக் கடவுள் என்றெல்லாம் பழ கதை படிக்கும்பொழுது, நீங்கள் உண்மையை உணர்ந்தமெ ஞானிகள் வாழும்படியான காலத்தில் வாழ்கின்ற வாய்ப்பை பெற்றிருக்கின்ருேம் என்று எண்ணி, பண்டைக் காலத்து மக்கள் கட்டுக் கதைகளை நம்பிக் கொள்கின்ற அஞ்ஞானிகள் என்று பேசிக் கொண்டிருக்கின்றீர்கள், ஆனுல் அந்தப்பழங் கதை சொல்லுகின்ற பண்டைக் காலத்தவரே உண்மையில் மெஞ்ஞானிகள் ஆவார்கள். ஏனென்ருல் அவர்கள்தான் பூவுலகத்தில் இருந்து கொண்டே மேலுலகங்களில் உள்ள ஆட்சியாளரது உருவங்களைப் பார்க்கவும், பார்த்தவற்றைப் பதிவு செய்யவும் தலைப்பட்டவர்கள் என்று அப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளது.

பெரிய புராணத்தில், காரைக்காலம்மையாரும், சுந்தர மூர்த்தி சுவாமிகளும் விண்ணுலகு சென்றதும், இறைவனிடத் தில் பேசியதும், அங்கு அவர்கள் பாடிய பதிகங்கள் இப்பூவுல கிற்கு அறிவிக்கப் பெற்றதும், சேக்கிழார் சுவாமிகள் குறிப் பிட்டிருக்கிருர்கள்.

எனவே நமது நாயன்மார்கள் எல்லோரும் நேரில் கண்டு அனுபவித்து ஆக்கம் பெற்ற இறைவனே நமக்கு நற்றுணை யாகவும், நல்லுறவாகவும், இம்மை, அம்மை, மறுமையிலும் நன்மையே அருளக் கூடியவராகவும் அன்றும், இன்றும், என்றும் இருந்து வருகிருர். பற்றற்ற அருளாளரான அவ ரையே உறவாகக் கொண்டு நமக்குள்ள பந்த பாசத்தை அறுத்து இன்பமாக வாழ்ந்து வருவோமாக.